Registered as a News paper in Ceylon

★ ★

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

பான் National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண்:

வலை 5 யாழ்ப்பாணம் சோபகிருது தை 28 ஆம் நாள் றம்மான் 25 (10 2-64) திங்கட்கிழமை இதழ் 364

உரம்

சகலவிதமான பயிர்களுக்கும்
வேண்டிய பசளை
பெற்றுக்கொள்ளலாம்

ஆ. மா. கிருஷ்ணபிள்ளை
அளவெட்டி.

# "எதிர்கால சந்ததியினரின் வழிகாட்டியாகுங்கள்"

## இளைப்பாறிய தமிழ் உத்தியோகஸ்தருக்கு அமிர்தலிங்கம் அறிவுரை

### புதிய சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், திங்கள்

"தமிழ்பேசும் மக்களை அரசாங்க உத்தியோக மோகத்தினின்று விடுவித்து அவர்களின் எதிர்காலச் சந்ததியினராகுதல் சுயதேவையைப் பூர்த்தி செய்து சுயாதினமாக வாழ, சிங்களமட்டும் சட்டத்தினால் பாதிக்கப் பட்டு உரிய வயதை அடையாது அரசாங்க சேவையிலிருந்து இளைப் பாற நிர்ப்பந்திக்கப்பட்ட நீங்களே அவர்களுக்கு வழிகாட்டிகளாக வேண்டும்."

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் சிங்களச் சட்டத்தினால் அரசாங்கசேவையிலிருந்து இளைப்பாறியோர் கழக அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசும்பொழுது மேற் கண்டவாறு குறிப்பிட்டார். இக்கூட்டம் யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் வித்தியாலயத்தில் திரு. மு. மகாலிங்கத்தின் தலைமையில் நடைபெற்றது.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:

"அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியதுடன், இனத்தின் சிந்தனையில் நீங்கள் ஓர் புரட்சிகரமான மாற்றம் உண்டாக்கியுள்ளீர்கள். காலனி ஆட்சியுடன் ஏற்பட்ட அரசாங்க உத்தியோக மோகம் தமிழ்பேசும் மக்களை விட்டுப் போய் இருக்கிறது. நீங்கள் அரசாங்க உத்தியோகத்தில் வெறுப்புற்று வெளியேறிய இச்சமயத்தில் எத்தனையோ வாலிபர்கள் அதே சேவையை மேற்கொள்ள வழிவகைகளை ஆராய்கிறார்கள். இந்தமோகம் அற்றுப்போகாவிடின் எமது இனத்தின் விடுதலையைப்பெற முடியாது தவிப்போம். சுய முயற்சியைக் கொண்டு இளைஞர்கள் வாழும் வழிகாட்டிகளாக அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியவர்களே சிறப்பாக அமையக் கூடியவர்கள்.

ஆசிரியர்கள் அரசியலுரிமை இழந்தவர்களாய் வாய்ப்பூட்டுக் கால்பூட்டுடன் இருப்பதால், அவர்களுடைய இடத்தை நிரப்பவல்லவர்கள் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியவர்களே. அவர்கள் தமிழ்பேசும் மக்களின் விடுதலை இயக்கத்தில் புத்துணர்ச்சியை ஊட்டி முக்கிய பங்காளர்களாக அமைய வேண்டும்."

திரு. மு. மகாலிங்கம் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

சிங்களச் சட்டம் ஒருசில தமிழ் மக்களையே பாதிக்கின்றது. தொழில் நிபுணர்கள், டாக்டர்கள் ஆகியோரை அது பாதிக்கவில்லை. அது பாஷைப் பிரச்சினை மட்டுமல்ல. அது ஒரு மனிதப் பிரச்சினையாகும். இம்மனிதப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டியது அவசியம்.

---

பண்டாரநாயக்கா கொலை

# விசாரணைக் கமிஷன் கூடியது

## பகிரங்க விசாரணைகள் மார்ச் 11-ல் ஆரம்பம்

கொழும்பு, ஞாயிறு

பண்டாரநாயக்கா கொலை சம்பந்தமாக அரசியல் காரணம் எதவுமிருக்கிறதா என்பது பற்றி விசாரணை செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்ட கமிஷன் முதன்முதலாக கேற்றுக் கூடியது. மக்கார்த்தி வீதியிலுள்ள கமிஷன் காரியாலயத்தில் கேற்று முதலாவது கூட்டம் நடைபெற்ற பொழுது கூட்டத்துக் கமிஷன் தலைவர் தேயரசர் திரு. டி. எஸ். பெர்னாண்டோ மட்டுமே சமுகமளித்திருந்தார்.

பண்டாரநாயக்கா கொலை விசாரணைக் கமிஷன் கேற்று கூடியபொழுது மூன்னாள் காபந்து மந்திரி சபையின் பிரதமர் டாக்டர் டபிள்யு. தஹநாயக்கா, பண்டாரநாயக்கா மந்திரிசபையின் முதலாவது பெண் மந்திரி திருமதி விமலா விஜயவர்த்தனா, திரு. ஒலிவர் குணதிலக முன்னாள் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. லயனல் குணதிலகா ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

கமிஷன் முன் ஆஜராகும்படி அழைக்கப்பட்ட ஐந்தாவது நபரான முன்னாள் நிதி மந்திரி திரு. ஸ்டான்லி டி' சொய்ஸாவின் சகோதரர் திரு. டிக்கி டி' சொய்ஸா கேற்று வரவில்லை.

மார்ச் மாதம் 11-ந் திகதி கமிஷனின் பகிரங்க விசாரணைகள் ஆரம்பமாகுமென்றும் அப்பொழுது அங்கு மீண்டும் ஆஜராகும்படியும் ஐவரும் கேட்கப்பட்டனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

பிரதமஸ்திகதரின்

# இடமாற்ற யோசனைக்கு தொழிற் சங்கங்கள் கண்டனம்

## "அமைச்சின் நடவடிக்கை தமிழ்பேசும் அனைவரையும் பாதிக்கும்"

யாழ்ப்பாணம், திங்கள்

சுகாதார அத்தியட்சகர் அலுவலகத்தின் பிரதம விதிதாரி திரு. பொன்னுத்துரையை சிங்களம் தெரியாததற்காக இடமாற்றம் சுகாதார மந்திரியின் நிரந்தரக்காரியதரிசி சுகாதார சேவை அதிபருக்கு கொடுத்துள்ள உத்தரவு கண்டிக்கப்படவேண்டியதென அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தினால் கூட்டப்பட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இம்மகாநாட்டுக்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. கோடீஸ்வரன்

(6-ம் பக்கம் பார்க்க)

டெஸ்ட் கிரிக்கெட்

# முதல் இன்னிங்ஸில் இந்தியா: 344

புதுடில்லி, பெப். 9

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமிடையே புதுடில்லியில் நடைபெறும் நான்காவது கிரிக்கெட் டெஸ்டில் இந்தியா தனது முதலாவது இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 344 ஒட்டங்கள் எடுத்துள்ளது. இங்கிலாந்துக் கோஷ்டி தனது முதலாவது இன்னிங்ஸை விளையாடத் தொடங்கி2விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 124 ரன்கள் எடுத்துள்ளது.

இலங்கைத் தமிழர்

# ஐ.நா. ஸ்தாபனத்துக்கு தூதுக் குழு அனுப்பவேண்டும்

## நேரடி நடவடிக்கையும் அவசியம்

### (ஒரு விசேஷ நிருபர்)

"இலங்கையிலுள்ள தமிழர்கள் தங்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாவையோ, இந்திய தலைவர்களையோ நம்பி இருக்க வேண்டாம். ஜவஹர்லால் நேருவோ அல்லது வேறு யாருமோ இவ்விஷயமாக எவ்வித உதவியும் செய்யப் போவதில்லை. தன்கையே தனக்கு உதவி. இலங்கைத் தமிழர்களே தங்கள் முயற்சியால் இதைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்."

என்றிவ்வாறு சென்னையிலுள்ள ஒரு பிரபல அரசியல் ஞானி, இலங்கையிலிருந்து சென்றிருந்த என்னிடம் பச்சையாகக் கூறினர்.

இலங்கைத் தமிழர் தங்கள் உரிமைகளைப் பெற எவ்விதம் முயற்சி செய்ய வேண்டும்? என்று கேட்டேன்.

"ஐக்கிய நாடுகள் சபைக்கு இவ்விஷயமாக நிலைமையை விளக்கி ஒரு மகஜர் அனுப்ப வேண்டும். இதுவரை அவ்விதம் யாராவது செய்திருக்கிறார்களா? என்று கேட்டார் அவர்.

தமிழரசுக்கட்சித் தலைவர் அவ்வித மகஜரை அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிகிறதென்றேன்.

"வெறும் மகஜரை மட்டும் அனுப்பி வைத்தாலிபோதாது. சர்வகலாசாலை உப அத்தியட்சகர் போன்ற கட்சிப் பற்றில்லாத பிரமுகர் அல்லது பிரமுகர்கள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்கு நேரில் சென்று நிலைமையைப்பற்றி விளக்க வேண்டும். ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஏதாவது அங்கத்துவ நாட்டின் மூலம் இப்பிரச்சினையை அச்சபையில் சமர்ப்பித்து, இதற்கு ஒரு விதமயம் ஏற்பட முயற்சிக்க வேண்டும்" என்றார்.

"நேரடி நடவடிக்கை எடுப்பது அவசியமா?" என்று கேட்டதற்கு, "நேரடி நடவடிக்கையும் ஓரளவு அவசியம் தான். மிதமான அளவில் இப்படி கிளர்ச்சி இருந்தால்தான் ஐ. நா. ஸ்தாபனமும் இதைப் பற்றி கவனம் செலுத்த முன்வரும்" என்றார்.

இலங்கை இந்தியர் பிரச்சினையைப்பற்றி பின்னர் கேட்டதற்கு, அவர்களும் ஐ. நா. ஸ்தாபனத்திற்கு இப்படியே முறையிடவேண்டுமென்றும், ஒரு தூதுக்குழுவை அனுப்பி மகஜர் சமர்ப்பிக்கவேண்டுமென்றார்.

கேள்வி:- இலங்கை இந்திய பிரச்சினை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சிருஷ்டியேயாதலால், இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் பொறுப்புண்டல்லவா?

பதில்: இப்பிரச்சினையை உண்டாக்கியது தோட்டத் துரைமாரேயன்றி பிரிட்டிஷ் அரசாங்கமன்று.

* * *

தமிழகத்தில் எங்கும் ஸ்தலஸ்தாபன தேர்தல் பிரசாரம் மிகத் தீவிரமாக நடைபெற்று முடிந்தது. இதனை அன்பர்கள் படிப்பதற்குள் பல முடிவுகளும் வெளியாகி இருக்கும்- காங்கிரஸுக்கும் தி. மு. க. வுக்கும் எங்கும் பலத்த போட்டி. இரட்டை காளை மாடுகள் (காங்கிரஸ்) சின்னமும் உதய சூரியன் (தி. மு. க.) சின்னமும் பல பல சுவர்களிலும் தீட்

(6-ம் பக்கம்பார்க்க)

பட்டினசபை

# "தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டாம்"

## சேவைநலம் குறித்து மூன்று அங்கத்தவர்கள் கோரிக்கை

நவலூர், திங்கள்

காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கத்தை பதவியிலிருந்து விலகவேண்டாமென்று கேட்டு பட்டினசபையின் மூன்று அங்கத்தவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆறு அங்கத்தவர்களைக் கொண்ட பட்டினசபையில் இரு அங்கத்தவர்கள் திரு. திடவீரசிங்கத்தை தலைவர்ப் பதவியிலிருந்து விலகும்படி விடுத்துள்ள வேண்டுகோளை ஆட்சேபித்து மூன்று அங்கத்தவர்கள் பதவியை ராஜினாமாச் செய்யவேண்டாமென்று கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

2-ம் வட்டார அங்கத்தவர் திரு. க. வைத்திலிங்கம் 5-ம் வட்டார அங்கத்தவர் திரு. ச. சிவனடியார், 6-ம் வட்டார அங்கத்தவர் திரு.

(2-ம் பக்கம் பார்க்க)

## சுகமடைந்து வருகிறேன்

— நேரு

புதுடில்லி, பெப். 9

பிரதமர் நேரு இன்று காங்கிரஸ் பாராளுமன்றக் கூட்டத்தில் பேசும்போது இந்தியாவுக்கு வரும் அகதிகள் விஷயத்தில் பாகிஸ்தான் முட்டுக்கட்டையிட்டு வருவதாகக் கூறினார்.

ஐ. நா. சபையில் திரு. சக்ளாவும், காஷ்மீரில் திரு. சாஸ்திரியும் செய்த பணிகளை அவர் பாராட்டிப் பேசினார்.

தாம் இப்போது நாளுக்கு நாள் சுகமடைந்து வருவதாயும், அலுவலசியமாக உடலை வருத்திகொள்ளவேண்டாம் எனத் தமக்கு ஆலோசனை கூறப்பட்டிருப்பதாயும் அவர் தெரிவித்தார்.

### மணிவாக்கு

உனது வாழ்க்கையில் சிறிதளவாவது நீ உபயோகமாக இரு. அது உன்னுடைய சக்திக்குட்பட்டது.

—மார்க்கஸ அரேலியர்


# ஈழநாடு

EELA NADU

ELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு
தை மீ 28 உ (10-2-64)


## தமிழ் உள்ளூராட்சி மன்ற மகாநாடு

வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள தமிழ் உள்ளூராட்சி மன்றங்கள் யாவும் தமிழில் நிர்வாகம் நடத்துவதென்றும் அரசாங்கத்துடன் தமிழிலேயே தொடர்பு கொள்வதென்றும் இதன்மூலம் தமிழ் மொழிக்கு மறுக்கப்பட்டுவரும் உரிமையைப் பெறலாமென்றும் திருக்கோணமலையில் நடைபெற்ற வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத் தலைவர்களின் மகாநாட்டில் இத்துடன் தமிழிப் தீர்மானிக்கப்பட்டுள்ளதும் பகுதிகளுக்கென அகில இலங்கை தமிழ்பேசும் உள்ளூராட்சிமன்ற சமாஜம் ஒன்றை நிறுவுவதென அந்த மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டுள்ளதும் இலங்கையின் ஸ்தலஸ்தாபன சரித்திரத்துக்கு மட்டுமின்றி இலங்கையில் தமிழ்பேசும் மக்களின் இன்றைய அரசியல் சூழ்நிலைக்கும் மிக முக்கியம் வாய்ந்ததாகும்.

அகில இலங்கை கிராம சபை, அகில இலங்கை நகர சபைத் தலைவர்கள் சங்கம் ஆகியவைகளிலிருந்து தமிழ்ப் பகுதி உள்ளூராட்சி சபைகள் பிரிந்து தனியாக தமக்குள் ஒரு சமாஜத்தை நிறுவுவதற்கு இந்த மகாநாடு தீர்மானித்திருப்பது இலங்கையின் ஐக்கியத்துக்கு உதவ முடியாதென்றாலும் இன்றைய நிலையில் இது தவிர்க்க முடியாததென்பதை மகாநாட்டுக்குத்தலைமை வகித்த திருக்கோணமலை நகரசபைத் தலைவர் டாக்டர் சிவானந்தம் நிகழ்த்திய உரை உணர்த்துகிறது. தமிழ்ப்பகுதிகளில் ஸ்தலஸ்தாபன சபைகளின் அலுவல்களை தமிழில் அமுல் நடத்துவது மட்டுமல்ல தமிழ்ப்பகுதிகளிலுள்ள பிள்ளைகளின் கல்விவசதிபற்றியும் குடியேற்றத்திட்டங்கள் பற்றியும் மகாநாட்டில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்தலஸ்தாபனசபைகளின் கடமைகள் எவையென்பது பற்றி வியாக்கியானம் செய்யப்படக் கூடுமென்றாலும் மக்களின் நலன்பற்றி அவை கவலை கொள்வதில் நியாயமில்லையென்று கூற முடியாது. தமிழ்ப்பகுதிகளிலுள்ள ஸ்தலஸ்தாபனசபைகள் மூலம் உத்தியோக மொழியைத் திணிக்கவும் அவைகள் விரும்பாத அலுவல்களை அவைமீது சுமத்தவும் ஸ்தலஸ்தாபனப்பகுதியும் அரசாங்கம் சமீபத்தில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டதும் இவ்விஷயத்தில் அகில இலங்கை கிராமசபைகள், நகரசபைகள் சங்கம் எவ்வித சிரத்தையும் எடுக்காமல் இருந்ததுவுமே திருக்கோணமலை மகாநாடு கூடவும் இத்தீர்மானங்கள் நிறைவேறவும் காரணமாயிற்று. இலங்கையில் ஸ்தலஸ்தாபன சேவையின் பிதா எனக் கருதப்படுபவர் காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா ஸ்தலஸ்தாபன சபைகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்பதும் மத்திய அரசாங்கத்தின் தலையீடு அதிகம் இருக்கக் கூடாதென்பதும் அவரது கொள்கை. இதனைத்தான் பிரதேச சபைகள் அமைக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்ததுடன் அச்சபைகளுக்கு குடியேற்றம், கல்வி முதலிய அதிகாரங்களையும் வழங்க வேண்டுமென கருத்துத் தெரிவித்திருந்தார். இக்கருத்து பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் இடம்பெற்றிருந்தது.

திருக்கோணமலை மகாநாட்டுத் தீர்மானங்களை அரசாங்கம் உண்மை நிலையைக் கண்டுகொண்டு பார்க்குமேயானால் காலஞ்சென்ற பிரதமரின் கொள்கைகளுடன் இணைந்திருப்பதை உணர முடியும். தமிழர்கள் சிங்களத்துக்கு எதிராக அல்லது சிங்களவர்களுக்கெதிராக அணி திரட்டுகிறார்களென சந்தேகக்கண் கொண்டு பார்க்காது அவர்களுடைய கோரிக்கைகளை ஆராய்ந்து பார்த்து சமாதானத் தீர்வுக்கு வழிகாண அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும். இதேசமயம் உள்ளூராட்சிமன்ற சமாஜம் அமைக்கப்பட்டதும் தமிழ்ப்பகுதிகளிலுள்ள ஸ்தலஸ்தாபன சபைகளுக்குள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் தங்கள் நியாயமான கோரிக்கைகளைப் பெறவும் அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு வழிகாண தமிழ்ப் பகுதி ஸ்தலஸ்தாபன சபைத் தலைவர்கள் ஆவன செய்ய வேண்டும்.

இலங்கையில் சிறுபான்மையினரின் நிலைபற்றி ஐ. நா.வுக்கு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தந்தியனுப்பியதற்கு ஐ. நா.விலிருந்து கிடைத்த பதில்பற்றி நாம் தலையங்கம் எழுதுகையில், சிறுபான்மையினர் ஒற்றுமையாக ஒரு கூட்டணி அமைத்து இப்பிரச்சினையை ஐ. நா.வுக்குக் கொண்டு செல்ல தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டுமெனத் தெரிவித்திருந்தோம். இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கு அடுக்கடுக்காக இன்னல்கள் பல வந்துற்றபோதிலும் துரதிர்ஷ்டவசமாக பலபிரிவுகளும், கோஷ்டிகளும் இன்னும் இருந்துவருகின்றன. இந்த நிலையில் வேறுபட்ட அரசியல் கொள்கைகளையுடைய உள்ளூராட்சிமன்றத் தலைவர்கள் ஒன்றுகூடி ஒரு சமாஜம் அமைத்து உரிமைகளைப் பெறுவதென ஏகமனதாகத் தீர்மானித்திருப்பது நம்பிக்கையையும் மகிழ்ச்சியையுமளிப்பதாகவுள்ளது.

தமிழ்பேசும் மக்களுக்கு நியாயமான உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பதிலோ, அவர்கள் இன்னல் அனுபவிக்கிறார்களென்பதிலோ யாருக்கும் அபிப்பிராயபேதம் கிடையாது. எனவே உள்ளூராட்சிமன்றத் தலைவர்கள காட்டியுள்ள முன்மாதிரியைப் பின்பற்றி தமிழ்பேசும் சமூகத்தின் அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும் மற்றும் ஸ்தாபனங்களும் ஒன்றுகூடி ஒரு சமாஜத்தையோ ஒருமுன்னணியையோ அமைப்பது நன்மை பயக்கும். இவ்விதம் செய்வதுடன் புதிய அமைப்புக்கு தமிழ்பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளை மதிக்கும் தமிழ்பேசாத சமூகத்தவரின் ஆதரவையும் ஒத்துழைப்பையும்கூட பெறமுடியும்.

தமிழ் ஊழியர்கள் தமக்குள் சங்கம் அமைக்கின்றனர். தமிழ் உள்ளூராட்சிமன்றங்கள் தமக்குள் சமாஜம் அமைக்கின்றன. இவ்விதம் தனித்தனியாகப் பிரிந்து வருவது நாட்டின் ஐக்கியத்துக்கு சிறிதும் நல்லதல்ல. ஐக்கிய இலங்கைக்கே இது அபாயம். இந்தநிலை ஏற்படுவதற்கு அரசாங்கத்தின் நடவடிக்கைகளே காரணம் என்பது பலரது கருத்து. இனியும் நிலைமையை மோசமாகவிடாமல் தமிழ்பேசும் மக்களின் குறைகளைத் தீர்த்து நியாயம் வழங்கி நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

## “இலக்கியமும் விஞ்ஞானமும் இன்றைய இரு பண்புகள்”

### நூல் வெளியீட்டு விழாவில் பேச்சு

மாவிட்டபுரம், ஞாயிறு

“ஒரு நாட்டின் பண்பாட்டை, உணர்ச்சியை அதன் சரித்திர ஆதாரத்தையெல்லாம் சுட்டிக்காட்டும் கருவியாக விளங்குவது இலக்கியம். இன்றைய உலகில் இருபண்புகள் உலகை ஆள முனைந்துள்ளன ஒன்று இலக்கியப் பண்பு மற்றையது விஞ்ஞானப் பண்பு. இந்த இருமுனைப் போராட்டத்தின் பேரூக ஏற்பட்டிருக்கும் பள்ளத்தில் பொது மக்கள் நிற்கிறார்கள். இலக்கியப் பண்பு விஞ்ஞானப் பண்புக்கும் விஞ்ஞானப்பண்பு இலக்கியத்துக்கும் பாலமாக அமைதல்வேண்டும்.”

நேற்று மாலை கும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் நடைபெற்றதிரு கனகசெந்திநாதன் எழுதிய “ஈழத்து இலக்கிய வளர்ச்சி” என்னும் நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை தாங்கிய அகில இலங்கை எழுத்தாளர் சங்கத் தலைவர் பிரம்மஸ்ரீ சீ. ஸ்ரீநிவாசன் கூறினார்.

வரவேற்புரை வழங்கிய திரு. ஏ. ரி. பொன்னுத்துரை ஈழகேசரிப் பொன்னையா, திருமகள் அழுத்தகம், சன்மார்க்கசபை ஆகியவைகளின் சேவையைக் குறிப்பிட்டதோடு இன்று தலைசிறந்த இலக்கிய விமர்சகராகத் திகழும் திரு செந்திநாதனின் சேவைகளையும் விளக்கினர்.

‘ஈழத்து இலக்கிய வளர்ச்சி’யின் முதலாவது பிரதியை மாவிட்டபுரம் பிரம்மஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் பணம் கொடுத்து வாங்கினர். அதைத் தொடர்ந்து நூலின பிரதிகளைச் சபையோர் வாங்கத் தொடங்கினர். அவ்விடைவேளைக்குள அனைவருக்கும் தேநீர் சிற்றுண்டி வழங்கப்பட்டன.

“இலக்கியத்தின் சுவை நுகர்ச்சி காலத்துக்குக் காலம் மாறுபடுகின்றது. ஒரு காலத்தில்-சூழ் நிலையில் சுவைபயந்தவை பிறிதோர் காலத்தில் முந்திய நிலைக்கு முற்றும் மறுபாடான நிலையைச் சிருஷ்டிக்கவும் கூடும். ஆனால் உண்மையான இலக்கியத்தின் தன்மை காலம், தேசம் இவற்றைக் கடந்து நிற்கிறது. இந்த உண்மையை ஓர்ந்துணராது ஒரு சில விமர்சகர் தத்தம் சொந்த விருப்பு வெறுப்புக்கேற்ப சிருட்டிகர்த்தாவையே முதலாகவைத்து சிருஷ்டியின் ஆற்றலைப் புறக்கணித்தும், விமாசனம் செய்கின்றார்கள். இந்த புன்நிலையினின்றும் விலகி உண்மையான விமர்சன நோக்கும் நேர்மைத் திறனும் அமையத் திரு. செந்திநாதன் இவ்வரிய நூலை நடுநிலை நின்றுயாத்திருக்கின்றார்”என்று ஆய்வுரை நிகழ்த்திய திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) குறிப்பிட்டார்.

கிழக்கிலங்கை எழுத்தாளர் பிரதிநிதியாக வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட திரு. எஸ். பொன்னுத்துரை பின்வருமாறு குறிப்பிட்டார்:-

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பகுதி தமிழைக் கொலை செய்கின்றது. கிழக்கிலங்கையின் கலைவளர்ச்சிக்கு உரைக்கல்லாக விளங்கும் நாடகங்கள் பாழாக்கப்படுகின்றன இந்த ரீதியில் பல்கலைக்கழகத் தமிழ்ப்பகுதியினர் கலைகளை வளர்க்காமலிருந்தால் போதும். இதுவே அவர்கள் தமிழ்த் தாய்க்குச் செய்யக்கூடிய அரிய பெரிய சேவையாகும்.

திரு. செந்திநாதன் இப்படிப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து வராது சாதாரண தமிழ்ச் சட்டம்பியாராகவிருப்பதனால்தான் இத்தகைய சிறந்த குறிப்பிட இலங்கையின் ஒருகால வளர்ச்சியை அடக்கிய இந்நூலை ஆக்க முடிந்தது.

அடுத்துப் பேசிய திரு. க. சி. குலரத்தினம் மகாகவி ரவீந்திரநாத்தாகூரின் கவிதை ஒன்றைப் படித்துக்காட்டி திரு. கனகசெந்திநாதனின் இலக்கிய சேவை அக்கவிதையின் உதாரணமாக விளங்குகிறதென்றார்.

திரு. சு. வே. மகாபாரதத்திலிருந்து தருமனிடம் தர்மதேவதை கேட்ட கேள்விகளுக்குவமையாக இலங்கையின் இலக்கிய தேவதை கேட்கின்ற கேள்விகளுக்கு திரு. கனகசெந்திநாதன் தனது இலக்கிய வளர்ச்சி என்னும் நூலில் தெளிவாகப் பதில் கூறியிருப்பதை பக்கங்கள் பந்திகளைச் சுட்டிககாட்டி விளக்கினர்.

திரு. சண்முகசுந்தரம் பேசும்போது கனகசெந்திநாதனின் புஸ்தகத்தை ஒவ்வொருவரும் தங்களாலான உதவிகளைப் புரிந்து விற்பனையாக்கி ஆதரவு நல்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஜனாப் எம். ஏ. ரகுமான் பதிப்புரை கூறினர்.

ஈழத்தின் இலக்கிய வளர்ச்சி என்னும் நூல் பிறந்த வரலாற்றினை விளக்கி, அதன் தன்மைகளை எடைபோட முற்படுபவர்களிடத்திருந்து மாறுபட்ட கருத்துகள் தோன்ற முடியுமென்பதைத் தெரிவித்த திரு செந்திநாதன் இதனைப் போலல்லாது விரிவானவகையில் புஸ்தகங்களைச் சேமித்து வைத்திருக்கின்ற பெரியார்கள் முயன்று பயன்படுத்தக் கூடியவகையில் உதவவேண்டுமென கவனிடிக்கொண்டார்.

இலங்கை எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் திரு. தேவன் முடிவுரை வழங்கினர்.

விழாவில் கலந்துகொள்ள விருந்து சொந்த அலுவல் காரணமாகக் கலந்துகொள்ள முடியாமையினிருந்த பண்டிதர் கிருஷ்ணபிள்ளை, பண்டிதமணி கணபதிபிள்ளை ஆகியவர்களின் வாழ்த்துரைகளை சன்மார்க்கசபைச் செயலாளர் திரு இராசரத்தினம் சபையில் வாசித்துக்காட்டினர்.

## செய்திச் சுருக்கம்

### சேலைகள் நகைகள் திருட்டு

சுமார் ரூ 2000 பெறுமதியுள்ள சேலைகளும் நகைகளும் கல்கிசையிலுள்ள ஒரு வீட்டிலிருந்து திருடப்பட்டுள்ளன. இச்சம்பவம் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### பெயர் மாறியது

திறைசேரியின் சுற்றறிக்கையின்படி தட்டச்சுக்காரர்கள் இனிமேல் “யடுறு லீகக்” என்றும், தட்டச்சு சேவை “யடுறு லீகக சேவய” என்றும் வழங்கப்படும்.

### யமனாக வந்த இரண்டு ரூபாய்

தனது பணப் பர்ஸுக்குள்ளிருந்த ஒன்பது ரூபாவில் இரண்டு ரூபாய் காணமற்போனதைக்கண்டு ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக ருக்மையைச் சேர்ந்த வயது முதிர்ந்த ஒரு வண்டிக்காரர் மரணமானர்.

### அந்தோ பரிதாபம்!

குளிரிலிருந்து தமது உடம்பைச் சூடாக்கிக்கொள்ளும் பொருட்டு தமது கட்டிலுக்குக் கீழாக சிறிதளவு நிலக்கரியைக் கொண்டு நெருப்பு மூட்டிய ஒரு மாது நெருப்புக் காயங்களினால் மரணமானர். இந்திரல்லகொட என்ற இடத்தைச் சேர்ந்த 65 வயதுள்ள டி. எல். றெயிகைத் உம்மாவின் மரணம் சுறித்து நடைபெற்ற விசாரணையின்போதே இவ்விபரம் தெரிவிக்கப்பட்டது.

### ரூ. 4 லட்சம் கடன்!

மத்திய அரசாங்கத்திடமிருந்தும் கொழும்பு மாநகரசபையிடமிருந்தும் தெஹிவலை – கல்கிசை மாநகரசபை ரூபா 3,91,261-45 க்கு கடன்பட்டிருக்கிறதென்று மேயர் திரு எஸ். டி' ஜெயசிங்கா தெரிவித்துள்ளார்.

### தேசிய சுவீப்பின் முதலாவது இழுப்பு

தேசிய சுவீப் டிக்கட்டுகள் விற்பனைக்கு வந்ததைத் தொடர்ந்து ஒன்பது வருடங்களாக இருந்துவந்த தேசிய ஆஸ்பத்திரி சுவீப் நிறுத்தப்பட்டது. தேசிய ஆஸ்பத்திரி சுவீப்பில், வாரமொன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் லாபம் கிடைத்தது. ஆனால் இந்தப் பணம் தனிப்பட்ட நிர்வாகம் ஒன்றுக்கே செலவிடப்படுவதால் இந்த சுவீப நிறுத்தப்பட்டு புதிய தேசிய சுவீப ஆரம்பிக்கப்பட்டுள்ளது தேசிய சுவீப் டிக்கட்டின் விற்பனை ஆரம்பமான முதல் நாளன்றே இரண்டு லட்சம் டிக்கட்டுகள் விற்பனையாகின. புதிய சுவீப்பில் பரிசு பெறும் மொத்தமான 103 பேருக்கு வரி விலக்களிக்கப்படும். இந்த சுவீப்பின் முதலாவது இழுப்பு இம்மாதம் 20ம் திகதி நடைபெறும்.

### சிறைவாசம்

இரண்டு பொலிஸாரை கத்தியால் குத்திய ஒருவருக்கு பதுளை மஜிஸ்டிரேட் திரு. ஜே. பி. வி. சுவாரிஸ் இரண்டு வருட கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார் சுமார் ஆறு வருடங்களுக்கு முன்னர் பதுளையைச் சேர்ந்த ஜெயினுலாப்தீன் என்பவர் ஒரு பொலிஸ் வீரரைக் கத்தியால் குத்தியதில் பொலிஸ் வீரர் மரணமானர். இதுசம்பந்தமான வழக்கில். ஜெயினுலாப்தீனுக்கு 10 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது சில காரணங்களை முன்னிட்டு ஆறு வருடங்களுக்குப் பின்னர் விடுதலையடைந்த அவர் இரண்டு தினங்களுக்கு முன்னர் மற்றுமொரு பொலிஸாரைக் கத்தியால் குத்தினர். ஜெயினுலாப்தீனுக்கு இப்பொழுது இரண்டு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

### உண்ணாவிரதத்துக்கு மேலும் ஆதரவு

உடரட்ட பலவாடிசிஷ்ய சங்கமயாவைச் சேர்ந்த 100 மாணவர்கள் இன்று முதல் டாக்டர் ஜயசூரியாவுடன் சேர்ந்து உண்ணாவிரதமிருப்பார்கள் டாக்டர் எப். ஆர். ஜயசூரியா, பதினொரு தினங்களாக உண்ணாவிரதமிருந்துவருகிறார்.

## “தலைவர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வி. இரத்தினராஜா ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

தற்போதைய தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் நமது வற்புறுத்தலின் பேரிலே தலைவராகக் கடமையாற்றி வருகிறார். சிங்களத்தில் கடமை செய்து வந்த காரியதரிசியை பதவிப் பொறுப்பை ஏற்க விடாது தமிழ் மொழிக்கு அவர் செய்த சேவை எமது பட்டினசபைக்கு தமிழ் இனத்திற்கும் வேண்டியதாக உள்ளது மேலும் பட்டின சபைக் காரியமசி விவகாரம் சரியான முறையில் தீர்க்கப்படவில்லை இச்சமயத்தில் இரு அங்கத்தினர்கள் தலைவரைப் பதவியிலிருந்து விலகும்படி கேட்டிருக்கிறார்கள் இதனையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துகிறோம்.

அடுத்த வாரம்

# ஜோன்ஸன்-ஹியூம் வாஷிங்டனில் சந்திப்பர்

வாஷிங்டன், பெப். 9

அமெரிக்க ஜனாதிபதி திரு. லின்டன் ஜோன்ஸனும் பிரிட்டிஷ் பிரதமர் சர் அலெக்டன்ஸ் ஹியூமும் அடுத்த வாரம் வாஷிங்டனில் சந்திக்கவிருக்கிறார்கள்.

பலவேறு உலகப் பிரச்னைகள்பற்றி பரிசீலனை செய்யும் பொருட்டே இவர்கள் சந்திக்கவிருக்கிறார்கள்.

அமெரிக்க அட்டோர்ணி ஜெனரல் திரு. ரொபர்ட் கென்னடியின் முயற்சியின் பலனாக தற்பொழுது பாங்ஹாக்கில் நடைபெற்றுவரும் மலேசியா தகராறு சம்பந்தமான பேச்சுக்கள் குறித்தும் இரு தலைவர்களும் பரிசீலனை செய்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் பிரதமர் சர். டக்ளஸ ஹியூம் வாஷிங்டன் செல்லும்பொழுது அவருடன் பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி திரு. படலரும் கூடவே செல்வார்.

# மதுரை, தஞ்சாவூர், கோவையில் காங்கிரஸுக்கு வெற்றி

## தமிழ்நாட்டு முனிசிபல் தேர்தல் விவரம்

சென்னை, பெப். 9

தமிழ்நாட்டு முனிசிபல் தேர்தல்கள் மதுரை, தஞ்சாவூர், கோயமுத்தூர், திண்டுக்கல், பேட்டுப்பாளையம், ஈரோடு, திருவண்ணாமலை, கோபிசெட்டிபாளையம், பொள்ளாச்சி ஆகிய நகரங்களில் காங்கிரஸ் வெற்றிபெற்றிருக்கிறது.

கோயமுத்தூர் நகரசபையில் 8 வருடங்களுக்குப்பின் காங்கிரஸ் மீண்டும் அதிகாரத்திற்கு வந்திருக்கிறது. அங்கு 26-வது வார்டில் போட்டியிட்ட ஒரு கயேச்சை அபேட்சகருக்கு ஓர் ஓட்டுக்கூட கிடைக்கவில்லை.

# "உலகின் மாபெரும் தலைவர்களில் ஒருவர் நேரு"

## ஜனாதிபதி நாஸர் பாராட்டு

கெய்ரோ, பெப். 9

சீனப்பிரதம மந்திரி சு-என்-லாய், கடந்தமாதம் ஜனாதிபதி நாஸருடன் பேச்சுவார்த்தை நடத்துகையில் கோஷ்டி சேராக் கொள்கை குறித்தும் கரலனி எதிர்ப்பு, விடுதலைப் போராட்டங்களில் நடுநிலைமை நாடுகளின் பங்கு குறித்தும் தமது கலந்தையைத் தெரிவித்ததாக ஜனாதிபதி நாஸர் கூறினார்.

சு-என்-லாயின் அச்சத்தையும் சந்தேகங்களையும் போக்கத் தாம் முயற்சிப்பதாயும், கூட்டணிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு சீனப்பிரதமர் நடுநிலைமைக் கொள்கையை ஆதரித்து அதன் ஆக்கபூர்வமான பணியை ஒப்புக்கொண்டதாகவும் நாஸர் கூறினார்.

ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டைத் தாங்கள் ஆதரிப்பதாகவும் ஆனால் மலேஷியாவுக்கும் இந்தோனேஷியாவுக்குமிடையேயும், இந்தியா-பாகிஸ்தான்-சீனு ஆகிய நாடுகளுக்கிடையேயும் அகே தகராறுகள் தாபோது நிலவுவதால் இத்தகைய கூட்டத்துக்கு தருணம் சரியில்லை என தாம் சீனப்பிரதமரிடம் தெரிவித்ததாயும் அவர் குறிப்பிட்டார்.

உலகின் மாபெரும் தலைவர்களில் ஒருவர் என நேருவை நாஸர் பாராட்டினார். நேரு, கெய்ரோ வந்து ஒய்வெடுத்துக் கொள்ளுவதைத் தாம் விரும்புவதாயும் அவரை அக்கறையுடன் கவனிப்போம் என்றும் நாஸர் கூறினர்.

# லாலா லஜபதிராய் நூற்றுண்டு விழா

## எல்லா ராஜ்யங்களிலும் கமிட்டிகள் அமைக்கப்படும்

புதுடில்லி, பெப். 9

லாலாலஜபதிராய் நூற்றாண்டு விழாக்கமிட்டிகள் எல்லா ராஜ்யங்களிலும் மாத இறுதியில் அமைக்கப்படும்.

லஜபதிராய் நூற்றாண்டு விழாக்கமிட்டியின் நிர்வாகக் கவுன்சில் கூட்டம் இங்கு நடைபெற்றபோது அவ்வாறு அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீலால்பகதூர் சாஸ்திரி இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் ஸ்ரீஜெயப்பிரகாஷ்நாராயண், உ. பி. கவர்னர் ஸ்ரீவிஸ்வநாத்தாஸ், ரயில்வே மந்திரி ஸ்ரீதாஸப்பா, குஜராத், ஹிமாசப் பிரதேச முதன்மந்திரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவுக்காக நிதிதிரட்ட பிரதமரின் கையெழுத்திட்ட வேண்டுகோளை விடுவிப்பதென்றும் கவுன்சில் தீர்மானித்தது. பிரசாரம், இதர ஏற்பாடுகளைக் கவனிக்க உப கமிட்டிகளும் அமைக்கப்பட்டன.

லாலாலஜபதிராய் உருவச்சிலையை நிறுவுவதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக ஏற்கனவே ஒரு உபகமிட்டி செயல்பட்டு வருகிறது.

## கேரளம், ஆந்திர முதல்வர் பிரச்னை இன்று ஆலோசனை

புதுடில்லி, பெப். 9

கேரள காங்கிரஸ்கட்சியில் ஒற்றுமையை உண்டாக்க முடியும் என நம்புவதாக அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜ் கூறினார்.

இப்பிரச்னைபற்றி விவாதிக்க மத்திய பார்லிமெண்டரி போர்டு நாளை கூடுமுன் எதுவும் கூறவிரும்பவில்லை என அவர் கூறினார்.

கர்னூர்ரோடு பேர்க்கு வரத்து தேசியமயத்திட்ட வழக்கில் கபரீம் கோர்ட் தீர்ப்பையொட்டி ராஜினாமாச் செய்ய அனுமதி கேட்டுள்ள ஆந்திர முதல்மந்திரியின் விஷயமும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்.

# தறுதலைப் பிள்ளையினால் தந்தைக்குத் தண்டனை

ராய்ப்பூர், பெப். 9

யாராவது ஒரு பெண்ணிடம் இழிவாக நடந்து கொண்டால், அவன் தலையில் அந்தப் பெண்ணிடைய தகப்பனின் காலை செருப்பை வைத்து ஊர்வலம் வருவது ஜகதல்பூர் முஸ்லிம் பஞ்சாயத்தின் வழக்கம். ஒரு ஸ்ருடியோ முதலாளியின் பின்னே ஊரிலுள்ள பெண்களை இம்சித்து வந்தான். ஒரு பெண்ணின் தந்தை ஸ்ருடியோ முதலாளியிடம் புகார் செய்தார். அவர் அந்தப் பெண்ணின் தந்தையைத் தாறுமாறாகத் திட்டி அனுப்பிவிட்டார். அதன்பேரில் பெண்ணின் தந்தை, சமுதாய பஞ்சாயத்திடம் முறையிட்டார். ஸ்ருடியோ முதலாளி பெண்ணின் தந்தையினுடைய செருப்புக்களை சிரத்திலேந்தி ஊர்வலம்செல்ல வேண்டுமென்று பஞ்சாயத்து தீர்ப்பளித்தது. இந்த ஊர்வலத்தை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டுகளித்தனர்.

# 2-வது கப்பல் கட்டும் தளம்

திருச்சூர், பெப். 9

கொச்சியில் 2-வது கப்பல் கட்டும் தளம் அமைக்கப்படுவது நிச்சயம் என அறிவிக்கப்பட்டது.

—

# அந்தமான் நிக்கோபார்

புதுடில்லி, பெப். 9

அந்தமான், நிக்கோபார் தீவுகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதென்றும், அத் தீவுகளின் முக்கியத்தும் அதிகரித்திருக்கிறதென்றும் உள்நாட்டு மந்திரி திரு. நந்தா கூறினர்.

—

# 30 சோமாலியர் மாண்டனர்

அடிஸ் அபாபா, பெப் 9

சோமாலியாவைச் சேர்ந்த 300 ஆயுதபாணிகள் எதியோப்பியாவுக்குள் ஊடுருவி தாக்குதல் செய்தது பற்றி ஆராய எதியோப்பியமந்திரிசபையின் அவசரக்கூட்டம் சக்கரவர்த்தி ஹெயிலி ஸெலாஸி தலைமையில் கூடியது.

இத்தாக்குதலில் 30 சோமாலியர் கொல்லப்பட்டனர் என்றும், சென்ற மாதம் 14-ம் திகதி அவர்கள் மற்றோரிடத்தில் ஊடுருவியபோது 43 சோமாலியர் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. 15 எதியோப்பியர்களும் கொல்லப்பட்டனர்.

சோமாலிய விமானங்கள் 8 தடவை அத்து மீறிப்பறந்ததென்றும், இனி பதில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எதியோப்பியா எச்சரித்தது.

—

# காஷ்மீரில் பெரும் கைது

ஸ்ரீநகர், பெப். 9

காஷ்மீரில் இந்திய அதிகாரிகள் 200 க்கு மேலானோரைக் கைது செய்ததாக பாகிஸ்தான் ரேடியோ அறிவித்தது.

# வேஷ்டியை இழந்தார்

கோயமுத்தூர், பெப். 9

கோவை நகரசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற அபேட்சர் ஒருவர் பெரும் கூட்டத்தால் சூழ்ந்து கொள்ளப்பட்டார். கூட்டக் குழப்பத்தில் அவர் தன் வேஷ்டியை இழந்து அழும் நிலை ஏற்பட்டுவிட்டது தேவிலையை அறிந்த மற்றோர் அபேட்சகர் மூர்ச்சித்து விழுந்தார்.

# ஜனரல் நீவின் பர்மா திரும்பினர்

## நேருவுடன் ஒரு மணி நேரம் பேச்சு நடத்தினர்

புதுடில்லி, பெப். 9

பர்மியப் புரட்சிசபைத் தலைவர் ஜெனரல் நீவின் நேற்று பிரதமமந்திரி திரு. நேருவைச் சந்தித்து ஒருமணி நேரம் பேசினர். பின் அவர் உபஜனாதிபதி டாக்டர் ஸகிர் ஹுஸெய்னையும் சந்தித்தார்.

நேற்றுக்காலை ரங்கூனிலிருந்து புதுடில்லி வந்துசேர்ந்த ஜெனரல் நீவினை உபஜனாதிபதி டாக்டர் ஸகிர்ஹுஸெய்ன், மந்திரிகள் திரு. டி. கே. திரு. லால்பகதூர்சாஸ்திரி, ஸ்ரீமதி இந்திராகாந்தி ஆகியோர் விமானநிலையத்தில் வரவேற்றனர்.

தான் தனிப்பட்டமுறையில் இந்தியா வந்திருப்பதாயும், பிரதமர் நேருவுக்குத் தமது மரியாதையைத் தெரிவிக்கும் பொருட்டே ஜெனரல் நீவின் வந்திருப்பதாயும் கூறினர்.

நேற்றிரவு உபஜனாதிபதி டாக்டர் ஸகிர்ஹுஸெய்னுக்கு நீவின் தம்பதிகள் ஒருவிருந்தளித்தனர். இன்று அவர்கள் ரங்கூன் புறப்பட்டனர்.

இரு நாடுகளுக்குமிடையே நல்லெண்ணம் இருப்பதைக் காட்டுமுகமாகவே நீவினின் இந்திய விஜயம் அமைந்திருக்கிறது என ரங்கூன் பத்திரிகைகள் கூறின.

—

# "அகதிகளை துள்புறுத்காதீர்"

கல்கத்தா, பெப். 9

இந்தியாவுக்கு வரும் அகதிகளைத் துள்புறுத்த வேண்டாம் என மற்கு வங்க அரசாங்கம் கிழக்கு பாகிஸ்தானுக்கு அனுப்பியுள்ள குறிப்பில் வேண்டிக்கொண்டிருக்கிறது. இவ் விஷயத்தில் நேரு — லியாகத் அலிகான் உடன்பாட்டைப் பின்பற்றுமாறு அது கோட்டுக்கொண்டிருக்கிறது.

நேற்று டில்லியில் மத்திய மந்திரிகளும், ராஜ்ய முதன் மந்திரிகளும் கூடி அகதிகள் புனரமைப்பு பற்றி ஆலோசனை நடத்தினர்கள்.

—

# காஷ்மீர்விவாதம்

நியூயோர்க், பெப். 9

காஷ்மீர் விவாதம் ஐக்கிய நாடுகள் பாதோபஸ்து சபையில் நேற்று தொடர்ந்தும் நடைபெற்றது. கடந்த புதன் கிழமை இந்தியா சார்பில் திரு சக்லா நிகழ்த்திய உரைக்கு பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி திரு. புட்டோ நேற்று பதிலளித்தார்.

திரு. சக்லா தெரிவித்திருந்த குற்றச்சாட்டுகள் அனைத்தையும் திரு புட்டோ நிராகரித்தார்.

—

# யுதாண்ட் ஆலோசனை

நியூயோர்க், பெப். 9

ஐ. நா. தலைமைக் காரிய தரிசி யுதாண்ட் நேற்று அமெரிக்கா, பிரிட்டிஷ், பிரெஞ்சு, ரஷ்யப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினர். உதவி தலைமைக் காரியதரிசி திரு. ராலப் புஞ்சேயும் அப்போது பிரசனனமாயிருந்தார்.

சைபரஸ், மலேஷியா, மற்றும் நடைமுறையிலுள்ள இதர பிரச்னைகள் ஆகியன குறித்து அவர்கள் பேசியதாகக் கூறப்படுகிறது.

—

# ஏர் இந்தியாவுக்கு புதிய விமானங்கள்

புதுடில்லி, பெப். 9

ஏர் இந்தியா தைபனம் 8 அமெரிக்க "சூப்பர் லோனிக்" விமானங்களுக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறது. இத்தகவலை அதன் தலைவர் திரு. ஜே ஆர். டி' டாட்டா தெரிவித்தார்.

# விநோபாஜியுடன் சம்பாஷணை

புதுடில்லி, பெப். 9

மத்திய மந்திரி திரு கவர்ணிங் நேற்று ஆச்சார்யா விநோபாஜியைச் சந்தித்துப் பேசினர். முன்னாள் காங்கிரஸ் அக்கிராசனர் திரு. யு. என். தேபர், ஸ்ரீமன் நாராயண் ஆகியோரும் அப்போது பிரசன்னமாயிருந்தனர்.

——

# 100க்கு மேலான சோமாலியர் பலி?

அடிஸ் அபாபா, பெப். 9

சோமாலியா தங்கள் நாட்டின் எல்லைப் பகுதிக்குள் அத்துமீறும் செயலில் ஈடுபட்டிருப்பதாக சக்கரவர்த்தி ஹெயிலி செலாஸி ஆபிரிக்கத் தலைவர்களுக்கு அறிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் பாதுகாப்பு சபையை அவசரமாகக் கூட்டுமாறு சோமாலியா கேட்டுக் கொண்டிருக்கிறது.

100-க்கு மேலான சோமாலியர்கள் எதியோப்பியர்களால் கொல்லப்பட்டதாக அது கூறியிருக்கிறது.

——

# ஆலய நிர்வாகம்

யாழ்ப்பாணம், ஏயிறு

யாழ்ப்பாணம் வண்-கிழக்கு, கொண்டலடி விஜயகர் ஆலய முன்றலில் கோவில் நிர்வாகம் சம்பந்தமாக திரு. எஸ். சின்னத்துரை தலைமையின்கீழ் ஓர் பொதுக் கூட்டம் கமீபத்தில் நடைபெற்றது.

அவ்வமயம் தலைவர், கூட்டத்தின் நோக்கத்தை விளக்கப் படுத்தியதுடன் சடந்த 13 வருடகாலமாக ஊரவர்களின் பண உதவியுடன் கோவிலின் நிர்வாகத்தை வகித்துவந்த திரு. வீ. பொன்னுத்துரை தேகநலன்கருதி விலகுவதாகவும் பஞ்சகர்த்தாக்களிடம் நிர்வாகத்தை ஒப்படைப்பதாகவும் தெரிவித்ததாகக் கூறவே மூன்று பேர் தவிர்ந்த ஏனையோர் பஞ்சகர்த்தாக்களிடம் ஒப்படைக்காது மீண்டும் திரு. பொன்னுத்துரையையே நிர்வாகத்தை நடத்தும்படி கேட்டுள்ளனர்.

திரு. பொன்னுத்துரை இதற்கு இணங்கினார்.

——

# பாம்பு தீண்டி மற்றுமொருவர் மரணம்

அக்கரைப்பற்று, ஞாயிறு

அட்டாளைச்சேனை கிராமத்தைச்சேர்ந்த கலந்தர்லெவ்வை முகமதுத்தம்பி என்பவர் காடிக்குளம் என்னும் வட்டையின் தெல்வயலிலுள்ள பகுதியில் காவலுக்குப் படுத்துறங்கும்போது நாகபாம்பு சொத்தையில் கடித்ததால் மரணமானார். இதற்குமுதலிரவும் இதேவட்டையில் படுத்துறங்கும்போது கையில் பாம்பு கடித்து ஒருவர் மரணமானது இங்கு குறிப்பிடத்தக்கது.

புதுவருடத்தோடு அம்பாரை மாவட்டத்தில் பாம்புக் கடியால் மரணமானவர்கள் தொகை அதிகரித்துக் கொண்டு வருகிறது. பக்கங்களிலுள்ள காடுகள் அழிக்கப்பட்டு விவசாயத்தின்கீழ் கொண்டுவரப்பட்டபின் புதான் பாம்புகளின் தொல்லை இப்பகுதியில் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது

# தை 29-ல் தான் சிவராத்திரி

நிகழும்சோபகிருது வருடம் தைமாதம் 29-ம் திகதி (11-2-64) செவ்வாய்க்கிழமையே மஹா சிவராத்திரி விரதம் கொள்ள வேண்டும் என்று இலங்கையில் வெளியாகும்வாக்கிய திருக்கணித பஞ்சாங்கங்களிலும், இந்தியாவில் வெளியாகும் அனேக பஞ்சாங்கங்களிலும் வெளியிடப் பட்டிருக்கிறது. மாகமாச அபரபட்ச சதுர்த்தசி மஹாநிசியில் வியாபித்துள்ள தினமே மஹாசிவராத்திரிக்குரிய தினமென்று சாந்திர மானிகள் கைக்கொள்ளும் ஸ்மிருதி புராணதி நூல்களில் மாத்திரமன்றிச் சௌரமானிகள் கைக்கொள்ளும் ஆகமங்களிலும் கூட விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகமங்களில் முதலாவதான பரார்த்த சங்கியையுடைய காமிகாகமத்தில் சிவராத்திரி பூஜா படலத்தில், 4, 5-ம் சுலோகங்கள் வருமாறு:-

ஸ்ருணுத்வம் தத்விதாநம்ஹி ஸர்வேஷாமபி ஸம்மதம்| மாகமாஸ்ய ஸிதேபக்ஷே வித்யதேயா சதுர்த்தசீ|| தத்ராத்ரி சிவராத்ரி ஸ்யாத் ஸர்வபுண்ய சுபாவஹா| தஸ்யாமேவ சிவே பூஜா சிவலிங்கே சிவாலயே|| என்றும் ஸ்காந்த புராணத்தில்:

மாகக்ருஷ்ண சதுர்த்தஸ்யாம் ரவிவாரோ யதா பவேத்| பௌமோதவா பவேத்தேபி கர்த்தவ்யம் வ்ரதமுத்தமம்||

இதன் பொருள்:- மாகமாச கிருஷ்ண பட்சத்தில் வரும் சதுர்த்தசி ஞாயிற்றுக்கிழமையிலாவது செவ்வாய்க்கிழமையிலாவது வருமேயானால் அந்தச் சதுர்த்தசி உத்தமோத்தமமாகின்றது என்றும்,

(இவ் வருடம் தைமீ 29உ சதுர்த்தசி செவ்வாய்க்கிழமையில் வருவதும் கவனிக்கத்தக்கது.) குமாரதந்திரத்தில்:

மாகபூஜாவிதி: ப்ரோக்தம் சிவராத்ரி விதிம்ச்ருணு|| தந்மாஸே க்ருஷ்ணபக்ஷேது வித்யதேயா சதுர்த்தசீ! தத்ராத்ரி சிவராத்திரிர்யாத் ஸர்வபுண்ய சுபாவஹா|| என்றும்,

இவ்வாறே, மாகமாசத்திலேயே சிவராத்திரி விரதம் கொள்ளப்பட வேண்டுமென்று பலசாஸ்திரங்களிலும் விதிக்கப்பட்டிருக்கின்றது.

"மாகமாசம் என்றால் எது? என்பதை ஆராய்வோம். மகர சங்கிராந்திக்குப் பின் முடிந்த அமாவாசை கழிந்த பிரதமை முதலாக, கும்ப சங்கிராந்திக்குப் பின் முடிந்த அமாவாசையிறுதியாகவுள்ள காலமே மாகமாசம் எனப்படும். மாகமாச லக்ஷணத்திற்கு கும்பசங்கிராந்தி மத்தியில் இருக்க வேண்டும்.

கும்ப சங்கிராந்திக்கு முன்னும் பின்னுமாகவே எப்போதும் மாக மாசம் வரும். மாகமாசமென்றால் அது தனியே மகர மாசமாகவோ, அல்லது தனியே கும்ப மாசமாகவோ ஒருபோதும் வரமாட்டாது. ஆகவே "மாகமாசமென்றால் கும்பமாசந்தான்" என்று கூறுவது கணிதவிதியறியாதவரின் விளங்காக்கூற்றும். மாகமாசமே கும்பமாசமென்றால் கும்பமாசமென்பது எப்போதும் மாகமாசத்தையே குறிக்குமா? பாற்குனமாசத்தின் ஒருபகுதி எப்போதும் கும்ப மாசத்திலேயே வருமன்றோ? மாகபாற்குன மிரண்டும் வரும் மாசத்தை மாகமாசந்தான் என்று சொல்லலாமா?

சாந்திரமாசங்களைச் சௌர மாசத்தாற் கொள்ளுவது ஒவ்வாது என்பதற்கு இன்னும் சில உதாரணங்களைக் காட்டுவாம்.

பாத்திரபதமாச பூர்வபட்ச சதுர்த்தி விநாயகசதுர்த்தி விரதம். இது பெரும்பாலும் ஆவணியில் வருவதால் ஆவணிச் சதுர்த்தியென்றும் கூறப்படும். ஆயினும் ஆவணிக்கடைசிப் பகுதியில் அமாவாசைவரும்போது பூர்வசதுர்த்தி புரட்டாதியிலும் வருமாதலால், விநாயகசதுர்த்தி விரதம் சில வருடங்களில் மாத்திரம் புரட்டாதியிலும் வரும். சாந்திரபாத்திர பதமென்பது புரட்டாதியென்ற சௌரமாசமேயாகுமென்றால் பாத்திரபத சுக்கில சதுர்த்தி எப்போதும் புரட்டாதியிலேயே வரவேண்டுமே. ஆவணியில் பெரும்பான்மை வருதல் தவறாகுமே! அப்படியிருக்கவும், பாத்திரபத சுக்கில சதுர்த்தியைப் புரட்டாதிச் சதுர்த்தியென்று அழைக்காமல் ஆவணிச்சதுர்த்தியென்று அழைப்பதன் காரணம் பெரும்பான்மை வழக்கம் பற்றி வந்ததேயாம். மாகமென்றால் மாசி ஆகாதவாறு, பாத்திரபதமும் புரட்டாதி ஆகமாட்டாது. ஆவணி புரட்டாதி இரண்டிலுமே பாத்திரபதம் வரும்.

இவ்வாறே ஆஸ்வீஜ சுக்கில பிரதமை முதல் நவமி இறுதியாக அனுஷ்டிக்கப்படும் நவராத்திரி விரதம் பலவருடங்களில் புரட்டாதியிலும், மற்றும் பலவருடங்களில் புரட்டாதியிலும் ஐப்பசியிலும், பங்காகவும், அரிதாக ஐப்பசியிலும் கொள்ளப்படுகின்றது.

கிருத்திகா சுக்கில பிரதமை முதல் ஷஷ்டி இறுதியாக அனுஷ்டிக்கப்படும் ஸ்கந்த ஷஷ்டி விரதமும், பல வருஷங்களில் ஐப்பசியிலும் கார்த்திகையிலும் பங்காகவும், அரிதாகக் கார்த்திகையிலும் கொள்ளப்படுகின்றது.

இவ்விரு விரதங்களின் நியதிகளைக் கவனிக்குமிடத்து, ஆஸ்வீஜ மாசமென்றால் ஐப்பசியென்றும், கிருத்திகாமாசமென்றால் கார்த்திகையென்றும் மாசப்பெயர் ஒற்றுமைபற்றிச் சௌரமாசப் பெயரால் கூறப்படவேண்டிய நியாயம் இருக்கவும், பெரும்பான்மை ஏற்படும் நியதி பற்றி புரட்டாதி நவராத்திரி என்றும், ஐப்பசி ஸ்கந்த ஷஷ்டி என்றும் உபசாரமாக வழங்கப்படுடன்றமை காண்க. இதனாலும், சாந்திரமாதப் பெயர்கள் அதே பெயரையுடைய சௌரமாசங்களைத்தான் குறிக்கும் என்பது எவ்வளவு அபத்தமென்பது விளங்குகின்றது.

இன்னும், எப்போதும் ஆஸ்வீஜம் என்ற சாந்திரமாசத்திலேயே கொள்ளப்படும்நவராத்திரியை சில வருடங்களில் புரட்டாதியிலும் ஐப்பசியிலுமாக இருமாதங்களில் பங்கிட்டு அனுஷ்டிக்க வேண்டியிருத்தலாலும், எப்போதும் கிருத்திகா மாசத்திலேயே கொள்ளப்படும் ஸ்கந்த ஷஷ்டியை சில வருடங்களில் ஐப்பசியிலும் கார்த்திகையிலுமாக இருமாதங்களில் பங்கிட்டு அனுட்டிக்கவேண்டியிருத்தலாலும், சௌரமானத்தால் இவ் விரதங்களை ஒரே மாசத்தில் அனுட்டிக்கமுடியாதென்பதும் விளங்குகின்றது. இக்காரணம் பற்றியே நவராத்திரி ஸ்கந்த ஷஷ்டி விரதங்களைச் சாந்திரமாசப்படி அனுட்டிக்கலாமென்று சௌரமானிகளும் ஒப்புக் கொண்டுள்ளனர். சௌரமானப்படிதான் அனுட்டிக்கவேண்டுமென்றால் ஆரம்பம் முதல் முடிவுவரை இவ்விரதங்களை ஒரே சௌரமாசத்தில் எப்படி அனுட்டிக்க இயலும்? சாந்திரமாசமொன்றிலேயே இவ்விரதங்களை ஒழுங்காக அனுட்டிக்கலாமன்றோ?

சாந்திரமாசங்கள் ஒவ்வொன்றும் இரண்டு சௌரமாசங்களில் பங்குபெற்றிருப்பதினால் சாந்திரமாசத்தின் முற்பகுதியான பூர்வ பக்ஷத்தில் வரும் விரதங்கள் பெரும்பாலும் முந்திய சௌர மாசத்திலேயே வரும். சாந்திரமாசப் பிற்பகுதியான அபரபக்ஷத்தில் வரும். (சிவராத்திரியைப் போன்ற) விரதங்கள் பெரும்பாலும் பிந்திய மாசங்களிலேயே வரும். இப்படிப் பெரும்பான்மைபற்றி இன்ன இன்ன சௌரமாசங்களில் வருமென்று உபசாரமாகக் கூறப்பட்ட நியதிகளை எப்போதும் அவ்வச் சௌரமாசங்களிலேயே வருமென்று கொள்ளக் கூடாது.

ஓர் உதாரணத்துக்காக இவ்வருடம் மாசிச் சங்கிரமம் மாசி மீ 1உ 17 25 எனாறு வந்தால் பங்குனிச் சங்கிரமம் பங்குனி மீ 1உ 5.49 என வரும். அப்படி வரும் போது மாசி 1உ அமாவாசை 31-14 என்று இருப்பதால் மாசிச் சங்கிரமத்துக்குப் பின் 1உ அமாவாசை முடிய ஒரு சாந்திரமாசம் ஆரம்பிக்கும். பின்ப பங்குனி மீ 1உ அமாவாசை 5.08 என்றிருப்ப சங்கிரமம் 5-49 என வருவதால் பங்குனி மாசச் சங்கிரமத்துக்கு முன் அமாவாசை முடிந்து அடுத்த சாந்திரமாசம் ஆரம்பமாகிவிடும். ஆகவே மாசியிலேயே இரண்டு அமாவாசை முடிவதால் மாசி மாதம் அதிக பாற்குனமாசமாகிவிடும். அப்படி வந்தால் அதிக மாசத்தில் சிவராத்திரி கொள்ளாமல் பங்குனி மீ 28உ தான் சிவராத்திரி கொள்ளுவதா? அல்லது சிவராத்திரிக்கு மட்டும் அதிக மாசதோஷம் இல்லையென்று விதி இருக்கிறதா? மாசியில் ஒருபோதும் அதிக மாசம் வரமாட்டாதா?

ஆகமங்களில் சௌரமாசங்களைச் சந்தேகத்துக்கிடமின்றிக் குறிக்கும்போது மேடமாதம், இடபமாதம் முதலிய இராசிப் பெயர்களாலேயே குறிக்கப்பட்டிருக்கின்றது. காமிகம் காரணம் முதலிய ஆகமங்கள் மாசி மாதத்தையே குறிப்பிட வேண்டுமென்று விரும்பியிருந்தால் மாகமாதமென்று குறிக்காது கும்பமாசமென்றே குறித்திருக்கலாம். அப்படிச் சொல்லியிருந்தால் சாந்திரமாசியா சௌரமாசியா என்ற சந்தேகம் இருக்கவேண்டியதில்லை.

சூரியன் கும்பராசியிற் செல்லும் (சௌர) மாதமே மாகமாதமெனவும் கும்பமாதமெனவும் பெயர்பெறுமென்றால், சாந்திர மாக மாசத்துக்குத்தான் தனிப் பெயர் என்னவோ? அதனைச் "சாந்திர மாகம்" என்றுதான் அழைக்கவேண்டுமா? மாகமென்ற பெயர் சாந்திர மாசத்தைக் குறிக்காதா? அல்லது, சாந்திரமாதமென்ற மாதமே எங்கள் அகராதியில் இல்லை; எங்கும் எப்போதும் சௌர மாதமொன்றே, உளது என்ற "தனி" எண்ணமா?

கண்டனூர் சிவ ஸ்ரீ அரு. இராமநாதக்குருக்கள் அவர்கள் எழுதிய சிவராத்திரி நிர்ணயத்தில்: "சித்தாகமத்திலே... சிவராத்திரியில் சௌரமாசத்தினாலே ஸ்திரலிங்கார்ச்சனஞ் செய்யவேண்டும்; கிருகத்தில ஆத்மார்த்த லிங்கபூசையை சந்திரமானப்படி செய்யவேண்டும். இல்லையானால், இரண்டையும் சௌரமானப்படியே செய்யலாம். ஏனென்றால், சௌர பட்சம் பிரசஸ்தம் சாந்திர பட்சம் அஸஸதம் சௌரம் ஸ்திரம் சாந்திரம் அஸ்திரம். இது முதலான காரணத்தால் சௌரமே ஆன்மார்த்தபராத்த லிங்கங்களுக்குச் சிலாக்கியமாகவிருக்கின்கிறது என்று கூறியிருக்கின்றார்.

ஈண்டு, "ஆத்மார்த்தலிங்க பூசையைச் சாந்திரமனப்படி செய்ய வேண்டும்" என்று முதற் கட்டளையிட்டு, பின் இல்லையானால், சௌரமானப்படியே செய்யலாம் என்று ஒருவாறு ஆமோதித்து, பின் சௌரமே ஆன்மார்த்த... லிங்கத்திற்குச் சிலாக்கியமாக விருக்கின்றதுஎன்றுமாறுக்கட்டளையிடுகிறது சித்தாகமம். அப்படியானால், "கிருகத்தில் ஆத்மார்த்தலிங்க பூசையைச் சாந்திரமானப்படி செய்யவேண்டும்" என்று முதற்கட்டளையிட்டதின் நோக்கந்தான் என்னவோ?

சைவர்களுக்குக் காமிகம் பிரசித்தமான மூலாகமம். இதில் சிவராத்திரி விரதம் மாக கிருஷ்ண சதுர்த்தசியில் கொள்ளத்தக்கது என்றே கூறப்பட்டிருக்கின்றது. இதனைக் கூறிய அதே படலத்தில இதனைச் சௌரமாசத்திலேயே செய்தல் வேண்டுமென்று விளக்காது விட்டு, உத்தரகாரணாகமத்தில், சாந்திரமாதத்தை நீக்கவேண்டும், சௌர மாதத்திலேயே சிவராத்திரியைச் செய்யவேண்டுமென்று கூறுவானேன்? மிகப்பெரிய காமிகாமத்திலே இதைச் சேர்த்து விளக்க இடம் போதாது போயிற்று? அல்லது அக்காலத்தில் சாந்திரமான அனுட்டிப்பே இருக்கவில்லையா?

சிவராத்திரியைச் சாந்திரமானத்தினால் கொள்ளக்கூடாதுஎன்ற போதே அதற்கு முன்பும் சிவராத்திரி சாந்திரமானத்தினாற்றான் கொள்ளப்பட்டுவந்தது. என்பதை ஒப்புக்கொண்டதாகும். இதனால் சாந்திரமான அனுட்டிப்புத்தான் முதன் முதலாக எங்கும் இருந்துவந்ததாகவும் சௌரமானத்தை அனுட்டிப்பவர்கள் தமது புதிய கொள்கைக்கு ஏற்பச் சாந்திரமாச விரதங்களைச் சௌரமாசத்தால் நிர்ணயிக்க முற்பட்டபோது தான் வித்தியாசங்கள் ஏற்பட்டதாகவும் தெரிகின்றது.

சாந்திரமாச அனுட்டிப்பும் சௌரமாச அனுட்டிப்பும் பெரும்பான்மை ஒரே சௌர மாசத்திற்றான் வரும். சிற்சில காலங்களில் மாத்திரம் வெவ்வேறு மாசங்களிலும் வரும். அப்படி இருவேறு விதமாக வராமல் எப்போதும் ஒரே காலத்திலேயே சைவர்களின் விரதானுஷ்டானங்கள் வரவேண்டுமாயின் அதற்குப் பொருத்தமான வகையில் விரத நிர்ணயஞ் செய்து கொண்டால் சாந்திரமானிகளும் சௌரமானிகளும் ஒரே தினத்திலேயே சிவராத்திரி முதலிய விரதங்களை அனுஷ்டிக்க ஏதுவாகும். அதுதான் எவ்வாறென்றெனின், உதாரணமாக: சிவராத்திரி நிர்ணயத்தில் சாந்திரமானிகளுக்குரிய மாகமாசமும் சௌரமானிகளுக்குரிய (கும்ப) மாசிமாசமும் தவறாது தொடர்புற்றிருக்குமாறு நிர்ணயிப்பதாகும்.

இன்னும் விளக்கமாகக் கூறுமிடத்து, "தை அமாவாசை கழித்து ஆரம்பமாகும் மாகமாச கிருஷ்ண சதுர்த்தசி மகாநிசி வியாபக தினம் மகா சிவராத்திரி" என்று சாந்திரமானிகளும், "மாசி மாசத்தில் முதலில் முடியும் அமாவாசைக்கு முந்திய மகாநிசி வியாபகமுள்ள அபர சதுர்த்தசி தான் மகா சிவராத்திரி" என்று சௌரமானிகளும் வைத்துக்கொண்டால், இருசாராரும் ஒரே தினத்திலே சிவராத்திரி விரதம் கொள்ளத்தக்கதாகும். சிவராத்திரி அரிதாக மாசியில் வராவிட்டாலும், சிவராத்திரிக்குரிய கிருஷ்ண பட்சத்தின் முடிவான அமாந்தம் மாசியிலேயே கட்டாயமாக முடிய வேண்டிருப்பதால், சிவராத்திரிக்கும் மாசி மாச சம்பந்தம் உண்டாகிறது. சிவராத்திரியை அடுத்துவரும் அமாவாசை எப்போதும் மாசியில் முடிவுறும் அமாவாசையே ஆகும். மாசியில் (அதிக மாசம் வந்து) இரண்டு அமாவாசை முடிந்தால் முந்திய அமாவாசைக்கு முன்பே சிவராத்திரி அனுட்டிக்கற்பாலது. அப்பொழுது சிவராத்திரிக்கு அதிக மாச தோஷம் இருக்காது.

அப்படி சாந்திரமானிகளும் சௌரமானிகளும் உண்மைக் காரணத்தை உற்று நோக்கி ஒரே தினத்தில் இவ்விரதத்தை அனுட்டிக்காமல், காலத்துக்குக்காலம் வெவ்வேறு மாதங்களில் அனுட்டித்து வருதல் பிற சமயிகளுக்கு நகைபபுக்கிடமும் சைவ சமயிகளுக்கு நம்பிக்கைக் குறைவுக்கு இடமுமாகும். இந்நிலைமை எவரராலும் விரும்பத்தக்கதல்ல.

இ. சி. இரகுநாதையர்,
சோதிடபரிபாலன மடம்

# "இரண்டு தினங்களிலும் சிவராத்திரி அனுஷ்டிக்கலாம்"

வருடாந்த இந்து மத நிகழ்ச்சிகளில் ஒன்றான மகாசிவராத்திரி தினம் சம்பந்தமாக அபிப்பிராயபேதம் நிலவி வருகிறது. இந்துக்களாகிய நாம் பெரிதும் மதிக்கும் இரு பெரிய மதத்தலைவர்கள் இரு தினங்களைக் குறிக்கிறார்கள். பெப்ரவரி 11-ம் திகதியும், மார்ச் 12-ம் திகதியுமே இந்த வித்தியாசமான தினங்கள் இந்தக் கருத்து வேறுபாட்டை கருத்தில் கொள்ளும் போது இரு தினங்களையுமே மகாசிவராத்திரியாகக் கொண்டாடலாம் எனத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி செய்வதினால் எவ்வித பாவமும் ஏற்படப்போவதில்லை.

இம்மாதம் 7-ம் திகதி "ஹிந்து" பத்திரிகையில் வெளியான ஒரு செய்தியின் படி இந்தியாவிலுள்ள பிரசித்தி பெற்ற காளஹஸ்தி ஆலயத்தில் இவ்வாண்டு இருதடவைகள் மகாசிவராத்திரி பிரம்மோத்ஸவம் கொண்டாடப் படவிருக்கிறது.

இங்குதான் சிவபெருமானை பூஜித்ததின் மூலம் ஒரு சிலந்தியும், ஒரு விஷநாகமும் ஒரு யானையும் மோட்ச மடைந்தன. கண்ணப்பநாயனர் மோட்ச மடைந்ததும் இங்கேயே.

19 வருடங்களுக்கொருதடவை வருடம் இருதடவைகள் பிரம்மோத்ஸவம் ஏற்படுகிறதென்றும், இவ்வாண்டு அத்தகைய வருடங்களில் ஒன்று என்றும் கூறப்படுகிறது. காளஹஸ்தி ஆலயத்தில் பெப்ரவரி 8-ம் திகதி முதல் 15-ம் திகதிவரையும் மார்ச் 8-ம் திகதி முதல் 15-ம் திகதி வரையும் இரு தடவை பிரம்மோத்ஸவம் கொண்டாடப்படவிருக்கிறது.

குறித்த ஒரு திகதி தவறு என இருசாராரும் கருத்து வேறுபட்ட போதிலும், இரு தினங்களையும் மகாசிவராத்திரி தினமாக அனுஷ்டிப்பதால் எவ்வித தோஷமும் ஏற்பட்டுவிடப்போவதில்லை.

மதவிற்பன்னர்களின் ஆலோசனைப்படி கூட இரண்டில் ஒரு தினத்தைக் கைவிடுவது மதக் குற்றம் செய்ததுக்கு ஒப்பாகும். அத்துடன் ஒரு புனித தினம் சமீபித்துக் கொண்டிருக்கும் போது, இவ்விஷயத்தில் அனாவசியமான வாதப் பிரதிவாதங்கள் செய்துகொண்டிருப்பதற்கு இது தருணமல்ல.

காலவரையறையற்ற ஹிந்து மதக் கொள்கையும், அதன் புனித பாரம்பரியமும் இரு தினங்களையும் மகாசிவராத்திரியாக அனுஷ்டிப்பதையே வரவேற்கும்.

எஸ். சிவசுப்பிரமணியம்.

# (மாசி) மகா சிவராத்திரி

அமாவாசை விரதம், பூரணை விரதம், சதுர்த்தி விரதம், சஷ்டி விரதம், நவமி, தசமி, ஏகாதசி விரதம், பிரதோஷம், கிருஷ்ணபட்ச சதுர்த்தசி இவை போன்ற திதிகளை அடிப்படையாகக் கொண்டு அனுட்டிக்கு விரதங்கள் யாவும் சாந்திர மாசங்களைக் கொண்டே கைக்கொள்ள வேண்டுமென்பது ஆகமவிதி. எனினும் ஆகம விதிகளும் மூல காரணங்கள் உண்டு. சாந்திர மாச விரதங்களில் சில சௌர மாசத்துடன் கலந்துகொள்வதுண்டு. அதேபோல் மகாசிவராத்திரியும் சாந்திர மாசமான 'மாக மாசமும்' சௌர மாசமான கும்ப (மாசி) மாசமும் சேர வருவதே வழக்கம். அநேக வருடங்களுக்கு ஒரு முறை சாந்திர மாசமான மாக மாசமும், சௌர மாசமான மகர (தை) மாசமும் சேர சிவராத்திரி வருவதுண்டு. இது மாத சிவராத்திரியாகும். ஒவ்வொரு மாசத்திலும் வரும் கிருஷ்ண பட்ச சதுர்த்தசியும் 'மாத சிவராத்திரி' எனச் சிவன் விரதமாகக் கொள்ளப்படுகின்றது.

இதன் காரணம்: சூரியனுக்கு இடப் பக்கத்தில் ஆகக் கிட்டவாகச் சந்திரன் வருங்காலம் கிருஷ்ண பட்ச சதுர்த்தசி ஆகும். சூரியன்-சிவம். சந்திரன்-சக்தி. ஆகவே 'மாதொரு பாகராய் சிவனை வழிபடுதற்கு உரிய நிலைகுறித்தே ஒவ்வொரு கிருஷ்ண பட்ச சதுர்த்தசியும் கூடும் நடுநிசி சிவராத்

(5-ம் பக்கம் பார்க்க)

நெல்லியடி வித்தியாலயம்

# "மாணவரின் கஷ்டங்களை உடன் தீர்த்துவைக்குக"

## கல்விப் பகுதியினரிடம் பழைய மாணவர் சங்கம் கோரிக்கை

நல்லூர், திங்கள்

நெல்லியடி மத்தியமகாவித்தியாலய விடுதிப் பழைய மாணவர் சங்கம் வித்தியாலயத்தில் ஏற்பட்டுள்ள கஷ்டங்களை கல்விப் பகுதியினர் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

விடுதிப் பழைய மாணவர் சங்கம் இது சம்பந்தமாக அனுப்பயுள்ள வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

வடமராட்சிப் பகுதி மாணவர்களுக்கு கல்வியளிப்பதில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஈழத்தின் பல பாகங்களிலுமிருந்து மாணவர்கள் வந்து இக் கல்லூரியில் தங்கிக் கல்வி பயில்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இவ்வளவு பிரபலமான கல்லூரியில் சில ஆண்டுகளாகக் காணப்படும் நிலைமை வருத்தத்திற்குரியது. இங்கு சர்வகலாசாலைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தும் சித்தியடைபவர்களின் தொகை மிகக் குறைவாக காணப்படுகிறது. விஞ்ஞானப் பிரிவிலேயே இந்த நிலை நிலவுகிறது. சர்வகலாசாலைப் பரீட்சைக்கு படிப்பிக்கும் நான்கு பாடகங்களில் பௌதீகம் இரசாயனம் ஆகிய இரு பாடங்களையும் மாணவர்களுக்கு கற்பித்து கொடுப்பதற்கு திறமையான ஆசிரியர்கள் போதியளவு இல்லாமையே நாம் மேலே கூறிய நிலைமை ஏற்படுவதற்கான உண்மையான காரணமாகும். அத்துடன் இப்பிரிவுகளுக்கான ஆய்வுகூடங்களிலும் செய்கை முறைப் பரீட்சை செய்வதற்கு போதியளவு உபகரணங்களும் இல்லாமையாலும் உயர்தர வகுப்பு மாணவர்கள் இவ்விரு பாடங்களிலும் சித்தி அடைவது மிகக் கடினமாகவிருக்கிறது. இந்த நிலையில் இங்கு கல்வி பயிலும் உயர்தர வகுப்பு மாணவர்கள் செய்வதறியாது இன்னலுறுகின்றனர். கல்லூரி அதிபர் இவ்விரு தேவைகளைப் பூர்த்தி செய்ய அதிக சிரத்தை எடுத்தும் கல்விப் பகுதியினரின் கவனக்குறைவால் இன்னும் நிறைவேறவில்லை. இந்நிலைமை நீடிப்பதனால் உயர்தர வகுப்பு மாணவர் பலர் ஒன்றும் செய்ய இயலாது கல்லூரியையே விட்டு விலகி விட்டார்களென்பது குறிப்பிடத்தக்கது. உயர்தர வகுப்புகளில் நிலவும் இந்த நிலை எதிர்காலத்தில் மாணவர்களின் கல்விக்குப் பெரும் இடையூறாக அமையும். இந்த நிலைமை மேலும் நீடிக்காது கல்விப் பகுதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### திருமலையில் திமிங்கிலம்

திருக்கோணமலை, ஞாயிறு

அறுபது அடி நீளமான திமிங்கிலமொன்று திருக்கோணமலை துறைமுகத்தில் கிடக்கிறது. இத்திமிங்கலத்தில் காணப்படும் பல காயங்கள், கப்பல் ஒன்றினால் தாக்கப்பட்டபோது ஏற்பட்டவை என்று கூறப்படுகிறது.






# மகா சிவராத்திரி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திரி எனக் கொள்ளப்படுகின்றது. சிவபெருமானின் நக்ஷத்திரம் திருவாதிரை. 'மிதுன ராசி' அதற்கு 5-ம், 9-ம் இடமான திரிகோணங்களில் சந்திரர், சூரியர் இடம், வலம் பொருந்த நிற்கும் நிலையில் 5-ம் வீட்டுக்குரிய ஐப்பசி மாசத்தில் வரும் கருஷ்ண பட்ச சதுர்த்தசி நரக சுரனுக்கு முத்தி அளித்த 'நரக சதுர்த்தசி' (மாத சிவராத்திரி) எனவும் உயர் திரிகோணமான 9-ம் இடத்தில் சூரியன் நிற்கும் மாசி மாதத்தில் வரும் அபர சதுர்த்தசி 'மகாசிவராத்திரி' எனவும் வழக்கத்தில் கொள்ளப்படுகின்றது. ஆகவே ஒவ்வொரு மாதத்திலும் வரும் சிவராத்திரியை மாத சிவராத்திரி எனவும், சாந்திர மாசமான மாகமாசமும், சௌர மாசமான கும்ப மாசமும் சேர்ந்த சிவராத்திரியை (மிதுன ராசிக்கு 9-ம் இடமான கும்பத்தில் சூரியனும் சந்திரனும் நிற்றலால்) 'மகா சிவராத்திரி' எனவும் கொள்ளப்படும். எனவே மகா சிவராத்திரிக்குச் சாந்திர மாசமான மாகமாசமா, சௌர மாசமான கும்ப (மாசி) மாசமா முக்கியம் என்பதை அறிஞர்களும், சோதிட விற்பன்னர்களும், ஆகம புராணக் குருமார்களும், ஏனையோரும் சிறிது ஊன்றி நோக்குதல் வேண்டும்.

மிதுன ராசிக்கு 9-ம் இடத்தில் சூரியன் நிற்கும் கும்ப மாசமே (மாசி) மகா சிவராத்திரிக்குப் பொருத்தமுடைத்தாம்.

மருதம்ஸ் செல்லத்துரை,
யாழ்ப்பாணம்.

## தை 29

நிகழும் சோபகிருது வருடம் தை மாதம் 29-ம் திகதி (11-2-64) செவ்வாய்க்கிழமை, மகாசிவராத்திரி விரதம் கொள்ளவேண்டுமென்று இலங்கையில் வெளியாகும் வாக்கிய திருக்கணித பஞ்சாங்கங்களிலும், இந்தியாவில் வெளியாகும் அநேக பஞ்சாங்கங்களிலும் வெளியிடப்பட்டிருக்கின்றது. மாக மாச அபரப் சதுர்த்தசி மகாநிசியில் வியாபித்துள்ள தினமே மகாசிவராத்திரிக்குரிய தினமென்றுள்மிருதி புராணாதி நூல்களிலும், ஆகமங்களிலும் கூடவிதிக்கப்பட்டிருக்கின்றது. இதையே கைக்கொள்ளவேண்டியது சைவ மதத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் மிகவும் அவசியமானது.

ஆதிகாலத்தில் வாக்கியப்படிதான் கணிதம் செய்யப்பட்டது. வாக்கியம் என்பது வேதகாலத்தோடு சேர்ந்து சம்பந்தப்பட்டது. சைவமதத்தவர்களுக்கும் காமிகம் பிரசித்தமான மூலாகமம். இதில் சிவராத்திரி விரதம் மகா கிருஷ்ணபட்ச சதுர்த்தசியில் கொள்ளத்தக்கதென்றே கூறப்பட்டிருக்கிறது.

இதையே எமது முன்னோர்களும், நாவலர் போன்ற பெரியார்களும், பிற்கால வல்லுனர்களான இரகுநாதையர், ஸ்ரீபதி, பாஸ்கராச்சாரியர் முதலானோர்களும் அனுட்டித்துவருகிறார்கள்.

ஆனாக்கொரு முறையாக இவை அனுட்டிக்கப்படுமாயின் இறை வணக்கத்தின் தூய்மையும் மாசுபடுவதுடன் சோதிடமும், பஞ்சாங்கமும் எள்ளிநகையாடும் நிலைக்கு வந்துவிடும்.

எனவே கோவில் மற்றும் தேவஸ்தான அதிகாரிகள் வாக்கிய பஞ்சாங்கக் கொள்கைகளை அறிந்து முன் அனுசரித்துவந்தது போல இம்முறை ஏற்ற தினமாகிய தை 29-ல் சிவராத்திரி அனுட்டித்தல் சாலச் சிறந்தது.

க. சுப்பையா,
புளியங்கூடல்.

## சிதம்பரத்தில் தை 29-ல்

பாரதத்திலும் ஈழத்திலும் கோவில்கள் இருக்கின்றன. எனினும் கோவில் என்றதும் எம் நினைவுக்கு வருவதில்லையம்பதியே. அத் திருத்தலத்தில் சிவராத்திரி தினத்தை தை 29-ம் திகதி கடைபிடிப்பதாக ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிகிறது. அகில சைவ உலகிற்கும் சிதம்பரமே வழிகாட்டியாகக் கொள்வது எம் சைவ மரபு. எனவே கோவில்கள் எல்லாவற்றிலும் தை மாதம் சிவராத்திரியைக் கடைப்பிடிப்பதே சாலச்சிறந்தாகும். சிதம்பரத் திருத்தலமின்றேல் பெரியபுராணம் இல்லை பெரியபுராணம் இன்றேல் எமது சைவம் சைவம் ஆகாது என்பதை நினைவு கொண்டு எமக்குப் பெரும் பிரமாணமான சிதம்பரத்தைப் பின்பற்றித் தை மாதத்தில் சிவராத்திரியைக் கடைப்பிடிப்பதைத் தவிர வேறு வழி எமக்குண்டா என்பதை சிந்தித்து முடிவுகொள்வது சைவர்களாகிய எங்கள் கடமை எனச் சிதம்பரத்திலிருந்து இரண்டு தினங்கள் முன் கடித மூலம் சிவராத்திரி தை 29-ம் திகதி நடைபெறவிருக்கிறது என்னும் செய்தி பெற்ற இலங்கைப் பல்கலைக்கழக சுமஸ்கிருத விரிவுரையாளர் திரு. ஜி சுந்தரமூர்த்தி சைவ மக்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புவதாக அறிவிக்கப்படுகிறது.

## மாநகரசபை - யாழ்ப்பாணம்

### கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள மலைவேப்ப மரம் ஒன்று விற்பனை செய்ய விருப்பதால் அம்மரத்தை வாங்க விரும்புவோரிடமிருந்து அதற்கான விலை கோரி முத்திரையிடப்பட்ட இரு பிரதிகளையுடைய கேள்விகள் என்னால் மாசி மாதம் 17-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் மாசி மாதம் 15-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை கேள்வி வைப்புப் பணமாக ரூபா 150-00 செலுத்தியவர்களுக்கு வழங்கப்படும்.

3 கேள்விகள் முதலாம் பந்தியில் சொல்லப்பட்ட நேரத்தில் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். அவ்வமயம் கேள்வியில் பங்கு கொள்வோர் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் அறிவித்தல் கிடைத்தவுடன் முழுப்பணத்தையும் செலுத்தி ஒரு வார காலத்தினுள் மரத்தைத் தறித்து அப்புறப்படுத்தவேண்டும். தவறுமிடத்து முழுப்பணத்தையும் பறிமுதல் செய்து அம்மரத்தை மீண்டும் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

5. கூடுதலாகக் கோரப்பட்ட விலை திருப்திகரமாக இல்லையென்று கருதப்பட்டால் முழுக் கேள்விகளையும் இரத்துச் செய்து மீண்டும் கேள்விகள் கோரும் உரிமை மாநகரசபை ஆணையாளருக்கு உண்டு.

6 மேலும் விபரம் யாழ்ப்பாண மாநகரசபை மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

ச. சின்னத்தம்பி,
மாநகரசபை
ஆணையாளருக்காக.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 5-2-64

1785


வருஷ டிப்பாசிட் வட்டி

8%

சிலோன் றிசேவ்
லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்

School of Technology
JAFFNA
Radio Servicing Theory

Course preparing for City & Guilds of London Institute Examination in May 1965 - commences March 2, 1964. Candidates must have reached G. C. E standard in English, Mathematics and Physics.

Apply immediately to:
Director.


### சைவ மகாசபை மயிலங்கூடல் - இளவாலை

மேற்படி சபையினரால் மயிலங்கூடல் ஞானவைரவர் கோவில் கட்டட நிதிக்காக 11-2-64 இல் நடாத்தப்படவிருந்த அதிர்ஷ்ட இலாபச்சீட்டு பரிசலிக்கப்படும் திகதி 10-4-64க்குப் பிற்போடப்பட்டுள்ளது.

சி. அப்புத்துரை
தலைவர்

1784


### வரி விளம்பரம்

எமது கல்லூரிமூலம் ஓராண்டில் மாணவிகட்கு மனையியலிலும் தையற்கலையிலும் பயிற்சி அளிக்கப்படும். சேர விரும்புவோர் பின்வரும் விலாசத்திற்கு மனுப்பண்ணவும். பதிவாளர், உயர்கலைக்கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் 1942

### ஸ்ரீ சரவணபவான் கபே சுன்னாகம்

சுத்தமான - சுவையான - சத்துள்ள சிற்றுண்டி - போசனம்-பானங்கள் கிடைக்கும். 1909

### தேவை

சைவ சமையல்காரர்: காந்தி நிலையம் மாணவர் இல்லத்துக்கு உடனே தேவை. மனேஜர், காந்திநிலையம், உருத்திரபுரம், பரந்தன். 1939

எமது டீசல் கோப்பறேசனில் கஷியராகக் கடமையாற்ற ஆள் தேவை. தராதரம் J S C. பிணைரொக்கம் 1000 ரூபா. வேதனம் 75 ரூபாவும் சாப்பாடும். தங்குமிடவசதியும் கொடுக்கப்படும். விவரங்களுக்கு: 20-2-64க்கு முன் விண்ணப்பிக்கவும். S A. இராசதுரை, 53, றெக்கிள மேசன்றோட், குருநகர், யாழ்ப்பாணம். 1945


## வேலை செய்யும் அங்கவீனர்கள்

கொழும்பு, ஞாயிறு

கொழும்புத் திட்டத்தின் கீழ் பிரிட்டனில் கைத்தொழில் தொடர்பு பற்றிப் படிக்கும் தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரியாகிய திரு. எஸ். ஏ. இராசையா அங்கவீனர்களைக் கொண்டு எவ்வாறு வேலைகள் செய்விக்கலாம் என்பதை அறிவதற்காக பிரிட்டனிலுள்ள நிறுவனங்களுக்கு விஜயம் செய்கிறார். அங்கவீனர்கள் பயிற்சி நிலையங்களிலும், புனரமைப்பு நிலையங்களிலும் பயிற்சி பெற்ற பிறகு, அவர்களால் வேலை செய்ய முடியும் என்பதைப் பார்க்கும்போது மிகவும் சந்தோசமாக இருக்கிறது என்று திரு. ஏஸ். ஏ இராசையா குறிப்பிட்டார்.

# இடமாற்ற யோசனைக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை வகித்தார். இம்மகாநாட்டில் இலங்கை வங்கிகளின் தொழிலாளர் சங்க யாழ். மாவட்டக்கிளை, புகையிரதப்பாதை தொழிலாளர் சங்க யாழ் கிளை, சுகாதார இலாகா தொழிலாளர் சங்கம், இன்ஷூரன்ஸ் அமைப்பாளர் பிரதிநிதிகள் சங்கம், அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம், அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

திரு. கோவலேஸ்வரன் மகாநாட்டின் குறிக்கோள் பற்றிப் பேசியதாவது:

யாழ்ப்பாணம் சுகாதார அத்தியட்சகரின் அலுவலகப் பிரதம லிகிதர் பொன்னுத்துரை சிங்களந் தகுதியற்றவரென்ற ஒரேயொரு குற்றச்சாட்டின் பேரில் அங்கிருந்து வேறு அலுவலகத்திற்கு மாற்றப்பட வேண்டுமென்று சுகாதார மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி சுகாதார அதிபருக்கு உத்தரவிட்டிருக்கிறார். சுகாதார அத்தியட்சகரின் அலுவலகத்தில் கடமையாற்றும ஆறு சிங்கள லிகிதர்கள் சிங்களம் தெரியாதென்று அவர் மீது சுமத்திய குற்றச்சாட்டின் பேரிலேயே மாற்றப்படவிருக்கிறார். அக்குற்றச்சாட்டிற்காக திரு. பொன்னுத்துரை மாற்றம் செய்யப்படின் சுகாதார அத்தியட்சகர் அலுவலகத்தில் உள்ள அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் அங்கத்தவர்களை முதலில் தொழிற்சங்க நடவடிக்கையிலிறங்கச் செய்து, தேவை ஏற்படின் யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள ஏனைய அலுவலகங்களுக்கும் விஸ்தரித்து அகில இலங்கைக்கும் விஸ்தரிக்கப்படும். இது சிங்களம் தெரியாதென்று ஒரு தமிழ் பேசும் ஊழியர் மீது சுமத்தப்பட்ட குற்றத்தின் பேரில் எடுக்கும் நடவடிக்கையானதால் தமிழ் பேசும் ஊழியர் அத்தனை பேரையும் பாதிக்கக் கூடியதாகும். ஆகவே தமிழ்பேசும் பகுதியிலுள்ள அத்தனை தொழிற்சங்கங்களும் இதை எதிர்ப்பதற்கு ஒரு கூட்டு முன்னணியை அமைத்தல் அவசியம்.

இலங்கை வங்கிகளின் ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் காரியதரிசி திரு. உமாபதி பேசும் பொழுது மொழிப்பிரச்னையில் ஒரு ஊழியர் மாற்றஞ் செய்வது கண்டிக்கப்பட வேண்டியது என்றும் தமது சங்க அனுமதியுடனேயே தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவது பற்றிய முடிபு கொடுக்க முடியுமென்றும் குறிப்பிட்டார்.

அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்கச் சார்பில் பேசிய திரு எஸ். ஆர் அருமைநாயகம் பேசியதாவது:

திரு பொன்னுத்துரையின் மாற்றம் தமிழ் அரசாங்க ஊழியர் சங்கத்திற்கும் சிறிலங்கா ராஜ்ய விபிகார சங்கமயாவுக்குமிடையிலுள்ள விவகாரம். தமிழ் அரசாங்க ஊழியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளைத் தலைவர் எல்லா முறையில் சிங்களம் மட்டும் சட்டம் முற்றும் முழுதாக அமுல் நடத்தப்பட வேண்டுமென்ற கொள்கையுடனுள்ள விபிகார சங்கமாயா 'சிங்களம் அமுலுக்குத் தடையாக' உள்ளார் திரு. பொன்னுத்துரை என்று குற்றஞ் சுமத்தி மாற்றத்தை வற்புறுத்துகின்றனர். பிழையான முறையில் ஒரு அரசாங்க ஊழியர் மாற்றஞ் செய்யப்படுகிறதென்பதை எமது சங்கம் எதிர்க்கிறது. அத்துடன் ஆத்திரப்பட்டு தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவது முறையல்ல. சென்ற 3-2-64-ல் கொழும்பில் கூடிய எமது தாய்ச் சங்க நிர்வாகசபை இவ்விவகாரம் பற்றி ஆராய்ந்தது. குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டாலொழிய திரு பொன்னுத்துரை இடமாற்றஞ் செய்யப்படக் கூடாதென்பதை வற்புறுத்தி அக்குற்றச்சாட்டு பற்றி விசாரணை செய்ய ஒரு விசாரணைச்சபை அமைக்க வேண்டுமெனச் சுகாதார சேவை அதிபரைக் கேட்டுக்கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்க உறுப்பினர்கள் இன்றும் ஆங்கில ஏகாதிபத்திய காலத்தில் வாழ்கிறார்கள். ஆஸ்பத்திரித் தொழிலாளர்களை அடிமைகளாக மதிக்கிறார்கள். அதிகாரத்தொனியில் அவர்களுடன் நடந்து கொள்கிறார்கள். தமிழ் பற்றி உரிமை கோருபவர்கள் தமிழ் தொழிலாளருடன் ஆங்கிலத்திலேயே தமிழ் எழுதிக் கொள்கிறார்கள். தமிழைப் புறக்கணிக்கிறார்கள். கண்ணியமற்ற முறையில் தொழிலாளிகள் நடத்தப்படும் முறையில் வர்க்கரீதியில் போராட்டத்திற்கு வருமாறு எங்ஙனம் அழைப்பீர்கள். அந்த கடமையாற்றும் திரு. பொன்னுத்துரையின் சக ஊழியர்கள் தம்மைத் திருத்திக் கொள்ளாத வகையில் தொழிலாளிகள் எப்பொழுதாவது அவர்கள் அங்கத்துவம் வகிக்கும் சங்க வேண்டுகோளுக்கு இசைய முடியாது. அது மட்டுமல்ல தொழிற்சங்க நடவடிக்கை எடுக்குமுன் கையாள வேண்டிய முறைகளை முதலில் கையாளுங்கள்.

யாழ் சுகாதார அத்தியட்சகர் அலுவலகத்திலுள்ள தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்க உறுப்பினர் சார்பில் தாம் ஆஸ்பத்திரித் தொழிலாளர்களிடம் மன்னிப்புக் கோருவதாகவும் அவர்களின் நடத்தைக்காகத் தாம் வருந்துவதாகவும் இனிமேல் அவ்விதம் நடக்காத விதத்தில் தாம் பார்த்துக் கொள்வதாகவும் திரு. கோவலேஸ்வரன் உத்தரவாதம் அளித்தார்.

திரு. ஸ்ரானிஸ்லோஸ், திரு. இராமநாதன் ஆகியோரும் பேசினர்.

## விசாரணைக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கமிஷனில் அங்கம்வகிக்கும் மற்றுமிரு நீதியரசர்களான கானா, ஐக்கிய அரபுக் குடியரசு நீதிபதிகள் கமிஷனின் அடுத்த கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பண்டாரநாயக்கா கொலை விசாரணைக் கமிஷனில் நீதியரசர் திரு. டி. எஸ். பெர்னாண்டோ (தலைவர்), நீதியரசர் திரு. அடெல் யூனிஸ் (ஐ. அ. கு.), நீதியரசர் திரு. ஜி. வி. மில்ஸ் ஒடோய் (கானா) ஆகியோர் அங்கம்வகிக்கின்றனர். இக்கமிஷன், முன்னாள் பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா கொலைசெய்யப்பட்ட நான்கு வருடங்கள் கழித்து நியமிக்கப்பட்டது.

பண்டாரநாயக்கா கொலை வழக்கில் சம்பந்தப்பட்டு குற்றவாளியாக் கணிக்கப்பட்டவர்களைத் தவிர இச்சதித் திட்டத்தில் வேறு எவரும் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா? அப்படிச் சதித் திட்டம் எதுவும் இருந்தால் திட்டமிடப்பட்ட கூட்டத்தினர் எவரும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா! கொலை வழக்கு விசாரணைகளைப் பொலிஸ் அதிகாரிகள் எவரும் தடைசெய்து அதற்கு இடையூறாக இருந்திருக்கிறார்களா? என்பன பற்றி கமிஷன் விசாரணை செய்யும்.

1959-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ம திகதி பண்டாரநாயக்கா கொலைசெய்யப்பட்டார். விசாரணைக் கமிஷன் 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் திகதி நியமிக்கப்பட்டது.

---

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மேற்குடி போ தொழிலாளரின் பொதுக் கூட்டமொன்று இம்மாதம் 16-ம் திகதி யாழ்ப்பாணம் கச்சேரியிலுள்ள அவர்களது காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

## காரைநகர் கொலை வழக்கு
### 20 ம் திகதி மீண்டும் விசாரணை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

காரைநகர் மேற்குவாசியான ஐயம்பிள்ளை கந்தையாவைக் கொலைசெய்ததாகவும், சதி செய்ததாகவும் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று நீதிபதி திரு. அரசுவால்டன் முன்னிலையில். விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது முதலாம் எதிரியின் வழக்கறிஞர் திரு. சாம் சபாபதி சுகவீனம் காரணமாக கோர்ட்டிற்கு வரவில்லை. வழக்காளி சார்பில் ஏற்பட்டிருந்த வழக்கறிஞர் திரு. கணேசலிங்கமும் நேற்று கோர்ட்டிற்கு வரவில்லை நீதிபதி வழக்கு விசாரணையை இம்மாதம் 20-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இறந்தவரின் மனைவியை முதலாம் எதிரியாகவும் காரைநகர் வாசியானவி. பரசாமியை இரண்டாம் எதிரியாகவும் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட இந்த வழக்கைப் பார்ப்பதற்கு நீதி மன்றத்தில் பலர் பார்வையாளர்கள் குழுமியிருந்தனர்.

இறந்தவரின் தந்தையுடன் வசித்துவரும் பிள்ளைகள் முதலாவது எதிரியாகிய தமது தாயாரைப் பார்ப்பதற்கு கோர்ட்டிற்கு வந்திருந்தனர். பிள்ளைகள் நால்வரும் தாயாருக்கு அருகில் சென்றபோது தாய் தான் சமீபத்திற் பெற்றெடுத்த ஆண் குழந்தையைக் காட்டினார் சாட்சியமளித்த சிறுமி நகுலாம்பாள் (வயது 13) தாயாருடன் எதுவித பேச்சு வார்த்தையும் வைத்திருக்கவில்லை. மற்றப்பெண்குழந்தை சாந்தகுமாரியும் தாயாருடன் பேச விரும்பாத நிலையில் முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டது. சிவபாக்கியம் (வயது 5) என்ற மற்றொரு பெண்பிள்ளையும், மகன் தெட்சணாமூர்த்தியும் (வயது 13) தாயாருடன் நன்றாகக் கதைத்துக்கொண்டனர்.

பிள்ளைகள் இருவர் தம்முடன் பயத்தினால் பேசாமல் இருக்கிறார்கள் என முதலாம் எதிர் நீதிபதிக்குக் கூறவே நீதிபதி பிள்ளைகளை அழைத்து நீங்கள் உங்கள் தாயுடன் பயமின்றிப் பேசலாம் எனக் கூறியதைத் தொடர்ந்து சாந்தகுமாரி தாயாருடன் பேச முற்பட்டார்.

## ஐ. நா. ஸ்தா. ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டப்பட்டுள்ளன, பல இடங்களிலும் தி. மு. க வுக்கு நல்ல ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது. விலைவாசிகள் உயர்வு காரணமாக பொதுமக்கள் காங்கிரஸ் ஆட்சிமீது அதிருப்தி கொண்டிருக்கிறார்கள். திராவிடநாடு கோரிக்கையை தி. மு. க. கைவிட்டதுபற்றி அக் கட்சியாளரிடையே கருத்துவேற்றுமைகள் இருக்கின்றன. போட்டி அனேகமாகசமபலத்துடன் இருக்கின்றது. காங்கிரஸ் வெல்லுவதாக இருந்தாலும் அது மிக சிரமமான காரியமேயாகும்.

---

## கார் திருடியவர் கைது

கொழும்பு, சனி

பொலிசாரால் பலகாலமாக தேடப்பட்டுவந்த நபர் ஒருவர் இன்று கைதுசெய்யப்பட்டார். கார் களவாடும் திருடர் கூட்டத்துக்கு தலைவர் எனக் கூறப்படும் இவரை கண்டுபிடிப்பதில் பொலிசாருக்கு பெரும் சிரமம் ஏற்பட்டது. களவாடப்பட்ட எட்டுக்கார்களை பொலிசார் இவரிடமிருந்து கைப்பற்றினர்.

யாழ்ப்பாணத்தில்

# மறியல் இயக்கம் அணிஅணியாக நடைபெறும்
## நேரடி நடவடிக்கை 17-ல்ஆரம்பம்

நல்லூர், திங்கள்

தமிழரசுக்கட்சி வருகிற திங்கட்கிழமை ஆரம்பித்து நடத்தவிருக்கும் நேரடி நடவடிக்கையில் ஓர் அம்சமான மறியல் இயக்கம் அணி அணியாக நடத்தப்படவிருக்கின்றது. காங்கேசன்துறைத் தொண்டர்கள் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் மறியல் இயக்கத்தை ஆரம்பித்து வைப்பார்களெனத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஐந்து அரசாங்க அலுவலகங்கள் முன்னால் மறியல் நடத்தப்படுவதுடன், காங்கேசன்துறையிலும் சில இடங்களில் மறியல் செய்யப்படுமென்றும் அறியப்படுகிறது.

சிங்களத்தில் கருமமாற்றும் அரசாங்க அலுவலகங்கள் முன்னால் குறிப்பிடப்பட்ட தொகைத் தொண்டர்கள் மறியல் செய்வர். ஒவ்வொரு தொண்டர் அணிக்கும் ஒவ்வொரு தலைவர் தெரிவுசெய்யப்பட்டு அந்த அணிகளை வழி நடத்தவும் ஏற்பாடுகள் செய்துள்ளதாக அறியப்படுகிறது.

அரசாங்க அலுவலகங்கள் முன் மறியல் செய்யும் தொண்டர்கள் அணி கைதுசெய்யப்படவோ அல்லது அப்புறப்படுத்தப்படவோ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் அந்த தொண்டர்கள் அணிக்குப் பதிலாக மற்றொரு தொண்டர்கள் அணி அந்த இடத்தில் உடனடியாக மறியல் செய்யவும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கடந்த சில தினங்களாக தமது தொகுதியிலுள்ள ஒவ்வொரு பகுதிகளுக்கும் சென்று தொண்டர்களை திரட்டும் பணியை மேற்கொண்டுள்ளார்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக் கட்சிக் காரியாலயத்தில் தொண்டர்களுக்கான பயிற்சி அளிக்கப்படவிருக்கின்றது. ஒவ்வொரு தொகுதிகளிலுமுள்ள தொண்டர்கள் தமது தொகுதி முறை வரும்போதே மறியல் போராட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படலாமென்று தெரியவருகிறது.

திரு செல்வநாயகம் கடந்த சனிக்கிழமை காங்கேசன் துறை பட்டினசபை மண்டபத்தில் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் காங்கேசன் துறையில் சிங்கள வகுப்பு நடத்தப்படுவதும் சில அரசாங்க அலுவலகங்களில் சிங்கள அமுல் நடைபெறுவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. காங்கேசன்துறையில் சிங்கள அமுலை எதிர்த்து விரைவில் தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் காங்கேசன்துறையில் நேரடிநடவடிக்கையை விரைவில் ஆரம்பிக்கக்கூடிய நிலை உருவாகியிருப்பதனால் தொண்டர்களை எந்த நேரத்திலும் போராட்டத்தில் குதிக்கத் தயாராக இருக்கும்படியும் திரு. செய்வநாயகம் கேட்டுள்ளார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)
நவா (கொம்பனித்தெரு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) மொடேர்ன் (பதுளை)
எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி
எம். ஆர். ராதா, [illegible], வி. கே. ராமசாமி,
புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, ஜி. வரலக்ஷ்மி
ஈ. வி. சரோஜா, சம்பந்தம்
மற்றும் பலர் நடிக்கும்



மொடர்ன் தியேட்டர்ஸ்
காட்டு ரோஜா
மதுரமான இசை, அருமையான படப்பிடிப்பு, சிறந்த டைரக்ஷன், குலுங்கக்குலுங்க சிரிக்க வைக்கும் ஹாஸ்யங்கள் அனைத்தும் நிறைந்த உன்னத மலர்ச் செண்டு.
இசை: கே. வி. மகாதேவன்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது